பக்கங்கள்: 16

இனி இது ரகசியம் அல்ல!

கோட்டாபய ராஜபக்ஷவின் இலங்கைக் குடியுரிமைச் சான்றிதழ் தொடர்பாக அவருக்குச் சாதகமாக மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று முன்தினம் வழங்கிய தீர்ப்புக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்வதற்கு மனுதாரர்கள் தீர்மானித் பக்கம் 02

காலைக்கதிர்
Kalaikathir
விடியல் 03 வள்ளுவர் ஆண்டு 2050 புரட்டாதி 18 ஞாயிற்றுக்கிழமை 06.10.2019 கதிர் 335

# தமிழர் தரப்பு பொது வேட்பாளரை நிறுத்தும் முயற்சி கைவிடப்பட்டது!

## யாழ். பல்கலை மாணவர்கள் நேற்று தமிழ்க் கட்சிகளுடன் அவசர சந்திப்பு




யாழ்ப்பாணம், ஒக். 06

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழர் தரப்பில் பொது வேட்பாளர் ஒருவரைக் களமிறக்குவதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் அதற்கான சாத்தியப்பாடுகள் இல்லாமையால் கைவிடப்பட்டுள்ளன. பக்கம் 03



# பிக்குகளைக் கைது செய்!

## யாழ்ப்பாணத்தில் போராட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 06

முல்லைத்தீவு செம்மலை நீராவியடிப் பிள்ளையார் ஆலய சூழலில் பௌத்த பிக்குகள் தலைமையிலான குழு முன்னெடுத்த செயற்பாட்டைக் கண்டித்தும், நீதியை வலியுறுத்தியும் யாழ். நகரில் மாபெரும் போராட்டமொன்று நேற்றுச் சனிக்கிழமை முன்னெடுக்கப்பட்டது. பக்கம் 03

# தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைவு ஆரோக்கியமான விடயமாகும்

## யாழ்.பல்கலை. மாணவர் ஒன்றியம் வரவேற்பு

யாழ்ப்பாணம், ஒக். 06

ஜனாதிபதி தேர்தலில் தமிழ் தேசிய பாதையில் பயணிக்கும் கட்சிகள் ஒருமித்த நிலைப்பாடு ஒன்றை எடுக்கக்கொள்கை அளவில் இணக்கம் தெரிவித்துள்ளமையும் ஆரோக்கியமான ஒன்றே ஆகும் என்று யாழ். பல்கலைக்கழக மாணவர் பக்கம் 03

# மஹிந்த - பஸில் - கோட்டா மூவரும் கூட்டாகக் கூட்டமைப்புடன் பேசுவர்

## சுமந்திரனுடன் நேரடியாகவே தொடர்பு கொண்டு ஏற்பாடு செய்யும்படி கோட்டா நேற்றுக் கோரிக்கை





கொழும்பு, ஒக்ரோபர் 06

தாமும் தமது சகோதரர்கள் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் பஸில் ராஜபக்ஷ ஆகிய மூவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் நேரில் பேச விரும்புகின்றனர் என்றும் அதற்கு ஏற்பாடுகள் செய்யுமாறும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் எம்.பியுடன் நேற்றுத் தொலைபேசி மூலம் தொடர்பு கொணிடு கோரினார் பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷ என அறியவந்தது. பக்கம் 03

# மைத்திரியின் கோரிக்கையை பரிசீலித்தது மஹிந்த தரப்பு!

## விசேட கடிதம் அனுப்பி தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 06

ஜனாதிபதி மைத்திரி பாலசிறிசேனவின்கோரிக்கைக்கமைய எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்காபொதுஜனபெரமுனவின்பெயரைமாற்றி வேறு பக்கம் 03

## லசந்த கொலை வழக்கு;

# சாட்சிகளை மறைத்த ரி.ஐ.டி. அதிகாரிகள்!

கொழும்பு, ஒக். 06

சண்டே லீடர் முன்னாள் ஆசிரியர் லசந்த விக்ரமதுங்க படுகொலை குறித்து முன்னர் விசாரணைகளை மேற்கொண்ட பயங்கரவாத பக்கம் 03

# கோட்டாபய தன்னோடு தேர்தலில் போட்டியிட்டு தோற்கவேண்டுமாம்

## சஜித் பிரேமதாஸவின் விருப்பம் இது

கொழும்பு, ஒக். 06

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷ தன்னுடன் தேர்தலில் போட்டியிட்டே தோற்கவேண்டும் என அமைச்சர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். பக்கம் 03

# அத்துரலிய ரத்ன தேரர் கோட்டாவுக்கு ஆதரவு

கொழும்பு, ஒக். 06

நாடாளுமன்றில் சுயாதீனமாக இயங்கும் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர், ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய பக்கம் 03

# கொழும்பில் 3 லட்சம் பேரை களமிறக்குகின்றது ஐ.தே.க.!

கொழும்பு, ஒக். 06

இலங்கையில் இது வரை காலமும் காணாத மாபெரும் மக்கள் பேரணி எதிர்வரும் 10 ஆம் திகதி வியாழக்கிழமை காலி முகத்திடலில் இடம்பெறவுள்ளதாக அமைச்சர் சுஜீவ சேனசிங்க தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சியின் பக்கம் 03

# காவியைக் கழற்றி எறிந்துவிட்டு சண்டித்தனத்தைக் காட்டுங்கள்!



## ஞானசாரருக்குச் செல்வம் சவால்

யாழ்ப்பாணம், ஒக். 06

ஞானசார தேரர் காவியைக் கழற்றிவிட்டுச் சண்டித்தனத்தைக் காட்டினால், நாங்களும் அதற்கான பதிலைக் பக்கம் 02

# மனோ எச்சரிக்கை!

கொழும்பு, ஒக். 06

இலங்கையில் மீண்டும் இனவாதத்தை தூண்டி விடுவதற்கான ஆயத்தங்கள் சில விமிகளால் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் மனோ பக்கம் 03

# அனைத்து மக்களுக்கும் மகிழ்ச்சியான வாழ்வு

## மகேஷ் சேனநாயக்க உறுதி

கொழும்பு, ஒக். 06

நாட்டிலுள்ள அனைத்து மக்களினது வாழ்க்கையையும் மேம்படுத்தி, அவர்கள் மகிழ்ச்சியாக வாழ்வதற்கான சூழ்நிலையை ஏற்படுத்துவேன் என மகேஷ் சேனாநாயக்க தெரிவித்துள்ளார்.

பப்ரல் அமைப்பின் ஏற்பாட்டில் கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் –

நாட்டில் அநாவசியமாக செலவாகின்ற அரசாங்கத்தின் நிதியை இனங்கண்டு அதனை வறுமை பிரதேசங்களில் வாழும் மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளுக்காக செலவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளேன்.

அதாவது சாதாரண மாணவர்களும் பூரண கல்வியை பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்தி, கல்வியில் புதிய புரட்சியை உருவாக்குவேன்.

மேலும் நாட்டிலுள்ள அனைத்து மக்களுக்கும் தேவையான வேலை வாய்ப்புக்களை உருவாக்குவேன். அதிலும் ஆசிரியர்களுக்கு அதிக சலுகைகளை வழங்குவேன்.

தேசிய பாதுப்பு விடயத்தில் வெளிநாடுகளின் அறிவித்தலுக்கு அமைய செயற்பாடுகளை முன்னெடுக்க முடியாது. அதாவது எமது நாட்டின் சூழலுக்கு ஏற்பவே நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும்.

அந்தவகையில் நாட்டினதும் மக்களினதும் பாதுகாப்பு நிச்சயம் உறுதி செய்யப்படும். நவீன நாகரீகத்துக்கு ஏற்றவாறு சட்ட திட்டங்களை மதித்து செயற்படுகின்ற ஒரு சமூகத்தை உருவாக்குவேன் – என்றார். (ஐ)

### இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துள்ளார்கள். ஆனால் அது உடனடியாக நடக்காது. இயன்றளவு தாமதத்துடன்தான் முன்னெடுக்கப்படும் என சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

மேன்முறையீட்டு மனு உயர் நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்படும். ஆனால் வாக்களிப்பு தினத்துக்கு முன்னர் அது நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்படுவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட மாட்டா என்றும் நம்பகரமாக அறியவந்தது.

தீர்ப்பின் காரணங்களை மேன்முறையீட்டு நீதிமன்றம் வெளியிட்டு ஆறு வாரங்களுக்குள் மேன்முறையீடு செய்யலாம் என்பதால், அடுத்த மாத முற்பகுதியில் – அதாவது வாக்களிப்புக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர் – இந்த மேன்முறையீட்டை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதற்கு மனுதாரர்கள் தரப்பு தீர்மானித்திருப்பதாகத் தெரிகின்றது.

மேன்முறையீட்டைத் தாக்கல் செய்தாலும், வாக்களிப்புக்கு முன்னர் அதனை நீதிமன்றில் விசாரணைக்கோ, பரிசீலனைக்கோ எடுக்கச் செய்வதற்கு மனுதாரர் தரப்பு முயலாது என்றும் கூறப்பட்டது.

அதாவது, இந்தக் குடியுரிமைச் சான்றிதழ் சர்ச்சை தொடர்பாக மேன்முறையீடு என்ற பெயரில் உயர்நீதிமன்றத்தில் சட்டக் கத்தி ஒன்று கோட்டாபயவின் தலைக்கு மேல் தொங்கிக் கொண்டிருக்கின்றது என்பதை இப்போதைக்கு மக்கள் முன்காட்டுவது மட்டுமே மனுதாரர்களின் நோக்கம் என்று கூறப்படுகின்றது.

நீங்கள் வாக்களித்து, கோட்டாபயவை ஜனாதிபதியாக்கினாலும், அந்தப் பதவியை அவர் வகிக்க முடியாதவாறு உயர்நீதிமன்றம் எந்நேரமும் உத்தரவு ஒன்றை விடுக்கக் கூடியதாக அவருக்கு எதிராக வலிதான வழக்கு ஒன்று உள்ளது என்பதை வாக்களிக்கச் செல்லும் பொது மக்களுக்கு நினைவூட்டுவதே இந்த வழக்கின் மனுதாரர்களின் தற்போதைய நோக்கம் என்று தெரிகின்றது.

இந்த வழக்கில் இப்போதைக்கு கோட்டாபய சற்று ஆறுதலாக ஓய்வு எடுத்து மூச்சு விடலாம் என்றாலும், அதற்கிடையில் நாளை நடக்கப் போகும் வேட்பாளர் மனுத் தாக்கலும் அவருக்குப் பெரும் சவாலாக இருக்கும் என்று கூறப்படுகின்றது.

இந்தத் தேர்தலில் போட்டியிடுவதற்கு சுமார் முப்பது பேர் வரை கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர். அவர்கள் எல்லோரும் நாளை வேட்புமனுத் தாக்கல் செய்ய வருவார்கள்.

அவர்களில் அரைவாசிக்கு மேற்பட்டோர் கோட்டாவின் வேட்பு மனுவுக்கு எதிராக ஆட்சேபம் கிளப்பும் நோக்கத்துடன், அதற்குத் தயாராகத்தான் வேட்புமனுத் தாக்கலுக்கு வருகின்றார்களாம் என்பது உள்வீட்டுத் தகவல்.

ஏற்கனவே பாஸ்போர்ட், அடையாள அட்டை பெற்றுக் கொள்வதில் கோட்டாபய பெருங் குளறுபடி செய்திருககின்றார் என்று கூறப்படுவது தெரிந்ததே.

இப்போது இரண்டு அடையாள அட்டைகள் – வெவ்வேறு இலக்கங்களுடன் – கோட்டாபய பெயரில் உள்ளன என்று கூறப்படுகின்றது. அவரது வேட்புமனுவில் அவரது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு எந்த அடையாள அட்டை இலக்கத்தை அவர் குறிப்பிட்டாலும் – அல்லது குறிப்பிடாமல் விட்டாலும் – அதைப் பெரிய விடயமாக்கி, ஆட்சேபம் கிளப்பி, கோட்டாபயவின் வேட்புமனுவை நிராகரிக்கச் செய்யும் முழு முஸ்தீபில் ஒரு குழு நாளை வேட்புமனுத் தாக்கல் மையத்துக்கு வரவிருக்கின்றது என்பது கனகச்சிதமான தகவல்.

ஓர் அடையாள அட்டை இலக்கத்தைக் குறிப்பிட்டால், அடுத்த அடையாள அட்டை விவரத்தைச் சமர்ப்பித்து அவர்தான் உண்மையான கோட்டாபய, இது போலி நபரின் வேட்புமனு என்று வாதிடுவார்கள் போலும்.

தேர்தல் ஆணையம் என்ன முடிவு எடுக்கும் என்பதில்தான் கோட்டாபயவின் எதிர்காலம் தங்கியிருக்கும் என்பது நிலைமை.

வெள்ளியன்று நீதிமன்றத்தில் அவருக்கு சாதகமாக வீசிய காற்று, நாளை தேர்தல் செயலகத்திலும் அவருக்கு சார்பாக வீசுமா? அதை அறிவதற்கு நாளை பிற்பகல் வரை நாம் காத்திருக்க வேண்டும்.

- மின்னல் -

# செஞ்சோலை காப்பகப் பிள்ளைகளை காணியிலிருந்து வெளியேற கட்டளை

கிளிநொச்சி மலையாளபுரம் கிராமத்தில் உள்ள செஞ்சோலை காணியில் குடியிருக்கும் செஞ்சோலைப் பிள்ளைகளை எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன் காணியைவிட்டு வெளியேறுமாறு கரைச்சி பிரதேச செயலகம் அறிவித்துள்ளது.

இது தொடர்பில் கரைச்சி பிரதேச செயலகம் எழுத்து மூலமான அறிவித்தலை செஞ்சோலை காணியில் குடியிருக்கும் செஞ்சோலை பிள்ளைகளின் தற்காலிக வீடுகளில் ஒட்டியுள்ளனர்.

இதனால் செஞ்சோலைப் பிள்ளைகள் செய்வதறியாது நிர்க்கதிக்குள்ளாகியுள்ளனர்.

கடந்த வருடம் இராணுவத்தின் கட்டுப்பாட்டிலிருந்து இந்தக் காணி விடுவிக்கப்பட்டிருந்தது. இதன் பின் செஞ்சோலை சிறுவர் இல்லத்தில் இருந்து வளர்ந்த பிள்ளைகள் திருமணம் செய்த நிலையில் இந்தக் காணியில் மீள்குடியமர்ந்தனர்.

இந்தக் காணி செஞ்சோலை மற்றும் காந்தரூபன் அறிவுச் சோலை சிறுவர் இல்லங்களுக்காக 2009 க்கு முன் விடுதலைப்புலிகளால் காணி உரிமையாளர்களிடம் இருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

ஆனால் தற்போது காணி உரிமையாளர்கள் காணி அனுமதி பத்திரம் ஆவணத்தை வைத்துக் கொண்டு, காணி தங்களுடையது எனவும் அதனை தங்களுக்கே மீளவும் வழங்க வேண்டும் தெரிவித்து யாழ்ப்பாணம் பிராந்திய மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்திருந்தனர்.

இந்த முறைப்பாட்டினை விசாரித்த மனித உரிமைகள் ஆணைக்குழு சட்டம் மற்றும் 2014ஆம் ஆண்டு சுற்றறிக்கை பிரகாரம் காணி அதன் ஆரம்ப உரிமையாளர்களிடமே வழங்கப்பட வேண்டும் என்ற தீர்மானத்தை வழங்கியதன் அடிப்படையில் கரைச்சி பிரதேச செயலாளரினால் காணியை வெளியேறுமாறு அறிவித்தல் ஒட்டப்பட்டுள்ளது.

இந்த அறிவித்தலில் அரச காணியில் அதிகாரமில்லாது ஆட்சி செய்கின்றீர்கள் எனவும் எனவே அந்தக் காணியை விட்டு ஒக்டோபர் 15ஆம் திகதிக்கு முன் வெளியேறுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் செஞ்சோலை காணிக்கு உரிமை கோருகின்றவர்களுக்கு செஞ்சோலை காணிகளுக்கு பதிலாக மாற்று அரச காணி வழங்கப்பட்டு அரச வீட்டுத்திட்டங்களும் வழங்கப்பட்டுள்ளன.

இலங்கையின் பிரிதொரு காணிச் சட்டத்தின் படி காணியற்ற ஒருவருக்கு இலங்கையில் எப்பகுதிலாவது ஒரு அரச காணி மாத்திரமே வழங்க முடியும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே செஞ்சோலை காணிகளுக்கு உரிமை கோருகின்றவர்களுக்கு அரச காணி வழங்கப்பட்டுள்ள நிலையில் மீண்டும் செஞ்சோலை காணிகள் வழங்கப்படுவது எந்த வகையில் நியாயம் என பாதிக்கப்பட்டவர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

தற்போது செஞ்சோலை காணியில் செஞ்சோலை மற்றும் காந்தரூபன் அறிவுச்சோலை சிறுவர் இல்லங்களில் இருந்த 54 பேர் குடும்பங்களாக பதிவு செய்துள்ளனர். அவற்றில் பலர் அந்தக் காணியில் தற்காலிக கொட்டகை அமைத்து குடியிருந்தும் வருகின்றனர்.

அத்தோடு கடந்த ஏப்ரல் மாதம் பதினொறாம் திகதி அன்று கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற மாவட்ட அபிவிருத்திக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிறிதரன் செஞ்சோலை காணிகள் செஞ்சோலைப் பிள்ளைகளுக்கே பகிர்ந்தளிக்கப்படல் வேண்டும் என்ற தீர்மானத்தை எடுத்திருந்தார் ஆனால் அதற்கு பின் எதுவும் நடக்கவில்லை என பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர். (ஐ)

### ட்ரோன் பறக்கத் தடை!

ராஜகிரிய , வெலிக்கடைப் பகுதிகளில் எதிர்வரும் திங்கட்கிழமை வரை ட்ரோன் கமராக்கள் பறக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

திங்கட்கிழமை வேட்புமனுக்கள் தேர்தல் செயலகத்தில் காலை 9 மணியில் இருந்து 11 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும். அதன் பின்னர் 11.30 வரை மனுக்கள் மீதான ஆட்சேபனை மேற்கொள்ள அனுமதிக்கப்படும். (ஐ)

### காவியைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொடுப்போம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் சவால் விடுத்துள்ளார்.

முல்லைத்தீவு நீதிமன்றத்தின் கட்டளையை அவமதித்து, தேரரின் சடலத்தை அடக்கம் செய்த ஞானசார தேரரைக் கைது செய்ய வலியுறுத்தி நேற்று யாழ். நகரில் மாபெரும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தின் நிறைவில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

எம்மைப் பொறுத்தமட்டில் காவி உடை புனிதமானது. காவி உடையைக் கழற்றிவிட்டு ஞானசார தேரர் சண்டித்தனத்தைக் காட்ட வேண்டும்.

எமது சைவ சித்தாந்தத்தின் அடிப்படையில் காவி உடை அணிவது புனிதமானது. ஒரு சில பௌத்த மதகுருமார் காவி உடை அணிந்து தமிழ் இனத்தை மிக மோசமாக நடத்த எத்தனித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

ஆயுதப் போராட்டம் மௌனித்த பின்னர், தமிழ் மக்கள் அனைவரும் அநாதரவாக நிற்பார்கள் எனச் சிங்கள பௌத்த பிக்குகள் எண்ணுவது போல் உள்ளது.

அகிம்சைப் போராட்டம் என்பது தமிழ் மக்கள் இலங்கைக்கு சொல்லித்தந்த வரலாறு அல்ல. ஆயுதப் போராட்டத்தின் மூலம் எமது மக்கள் தென்னிலங்கையை வாய் திறக்காதவண்ணம் வைத்திருந்தார்கள் – என்றார். (ஐ)

# மரண அறிவித்தல்

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 02 | 04 |
| 17 | 10 |
| 1939 | 2019 |



## திருமதி பேரம்பலம் சிவகாமசுந்தரி

காரைநகர் களபூமி தன்னை பொன்னாவளையை பிறப்பிடமாகவும் வவுனியா புகையிரத நிலைய வீதியை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த திருமதி பேரம்பலம் சிவகாமசுந்தரி நேற்று வெள்ளிக்கிழமை நள்ளிரவு 04.10.2019 இயற்கை எய்தி இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி ஆறுமுகம் தெய்வானை தம்பதிகளின் மகளும், திரு.திருமதி வேலுப்பிள்ளை கதிராசிப்பிள்ளை அவர்களின் மருமகளும், சிங்கப்பூரில் பிறந்த திரு. பேரம்பலம் அவர்களின் அன்பு மனைவியும், சாந்தி (பிரான்ஸ்) சிவசுந்தரம் (பிரித்தானியா), வசந்தி (வெள்ளவத்தை), சுகந்தி பிரான்ஸ்), உதயரூபினி, காலஞ்சென்ற ஜெயமாலினி ஆகியோரின் அன்புத் தாயாரும், தம்பி தம்பிராசா (தலைவர் – அடக்கு முறைகளுக்கு எதிரான ஜனநாயக அமைப்பு, உபதலைவர் – தமிழ்த் தேசியப் பணிக்குழு – கொழும்பு), காலஞ்சென்ற ரஞ்சித் குமாரசிறி, ஜெயகௌரி (பிரித்தானியா), சாந்த கோபாலன் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமியாரும், காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம், நடராசா, சிதம்பரம் ஆகியோரின் சகோதரியும், குந்தவை, திருவளவன், அபிமன் தம்பி (Engineering student - UCL - London) விஜயதர்சினி, விஜய், டயானா ஆகியோரின் அம்மம்மாவும் நஞ்சிகாவின் அப்பம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 07.10.2019 காலை 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் கிரியைகள் நடைபெற்று தச்சநாதன் குளம் இந்து மயானத்திற்கு தகனக் கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : தம்பி தம்பிராசா தொலைபேசி : 0777 301961

## தமிழர் தரப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழர்தரப்பு பொது வேட்பாளர் ஒருவரைத்தேர்தலில்நிறுத்துவதற்குச் சுயாதீனக் குழு ஒன்றும் யாழ். பல்கலைக்கழக மாணவர்களும் முயற்சிகளை மேற்கொண்டனர். ஆயினும் அது வெற்றியளிக்கவில்லை. சுயாதீனக் குழு மேற்கொண்ட முயற்சி நேற்று நண்பகலுடன் முடிவுக்கு வந்தது.

அதேபோன்று, ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளர் ஒருவரைக் களமிறக்குவது நல்ல யோசனை. ஆனால் அதற்குக் காலம் கடந்துவிட்டதால், அடுத்து மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராயவேண்டுமெனத் தமிழ்க் கட்சிகளிடம் மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள் வலியுறுத்தியுள்ளனர்.

தற்கால அரசியல் நிலைப்பாடு மற்றும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களின் நிலைப்பாடு தொடர்பில் அனைத்துத் தமிழ்க் கட்சிகளையும் பொதுநோக்கோடு ஒருங்கிணைக்கும் முயற்சியில் யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் முயற்சிகளை மேற்கொண்டிருக்கின்றது.

அந்த வகையில் தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளுடனான அவசர சந்திப்பொன்று நேற்று முன்னிரவு யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியப் பொது அறையில் இடம்பெற்றுள்ளது.

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகளுடன், இலங்கைத் தமிழரசுக் கட்சி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழ் மக்கள் கூட்டணி மற்றும் ஈ.பி.ஆர்.எல்.எவ், புளொட், ரெலோ அமைப்புகளின் பிரதிநிதிகள் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை. சோ. சேனாதிராசா, சி.சிறிதரன் மற்றும் வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம் ஆகியோரும் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி சார்பில் அதன் தேசிய அமைப்பாளரும் சட்டத்தரணியுமான வி. மணிவண்ணன், சட்டத்தரணி க. சுகாஸ் ஆகியோரும், தமிழ் மக்கள் கூட்டணியின் சார்பில் க. அருந்தவபாலனும், ஈ.பி. ஆர்.எல்.எவ் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனும், புளொட் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர் த. சித்தார்த்தன், முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் பா. கஜதீபன் மற்றும் எஸ். ராகவன் ஆகியோரும் ரெலோ அமைப்பின் சார்பில் அதன் செயலாளர் நாயகமும் சட்டத்தரணியுமான என். சிறிகாந்தா ஆகியோரும் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் சகல வேட்பாளரிடமும், வேட்பாளரின் பின்னாலுள்ள நாடுகளிடமும் தமிழ் மக்கள் சார்பில் கோரிக்கைகளை முன்வைத்து, உத்தரவாதம் கோரப்பட வேண்டுமென மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள் இந்தச் சந்திப்பில் வலியுத்தினர். சஜித் பிரேமதாஸ – மேற்குலகம், கோட்டாபய – சீனா தரப்புடன் பேசவேண்டுமென மாணவர்கள் கோரினர்.

இந்தக் கோரிக்கைகளை வேட்பாளர்கள், சர்வதேச சமூகம் கண்டுகொள்ளவில்லையென்றால் என்ன செய்வது என ஆலோசிக்கப்பட்டது.

தேர்தலைப் பகிஷ்கரிக்கலாம் எனத் தமிழ் தேசிய மக்கள் முன்னணி தெரிவித்தது. தேர்தலைப் பகிஷ்கரிக்கக்கூடாது என மாவை சேனாதிராசா தெரிவித்தார். பகிஷ்கரிப்பை எதிர்ப்பதாக ரெலோவும் தெரிவித்தது. பகிஷ்கரிப்பை புளொட்டும் ஆதரிக்கவில்லை.

பகிஷ்கரிப்பை அறிவிப்பதால் நிகழும் ஆபத்துக்களையும் சுட்டிக்காட்டினர் சிலர்.

சிறிதரன் எம்.பி தெரிவித்த போது, விடுதலைப்புலிகள் பகிஷ்கரிப்பை அறிவித்தபோது கிளிநொச்சியில் சைக்கிளில் சென்று ஒருவர் வாக்களித்ததைச் சுட்டிக்காட்டி, தற்போதைய நிலையில் 50 வீதமானவர்கள் வாக்களிப்பார்கள் எனத் தெரிவித்தார்.

அப்படியானால் அனைவரும் வாக்களித்து சஜித்தை வெல்ல வைக்கப் போகிறீர்களா என மணிவண்ணன் கேள்வியெழுப்பினார். அப்படியானால் வாக்களிக்காமல் பகிஷ்கரித்து கோட்டாவை வெல்ல வைக்கப் போகிறீர்களா என சிறிதரன் எம்.பி பதில் கேள்வியெழுப்பினார்.

அனைத்து தரப்பும் ஒற்றுமையாக பகிஷ்கரிப்பு கோரிக்கையை முன்வைத்தால் 50 வீதத்திற்கும் அதிகமானவர்கள் பகிஷ்கரிப்பார்கள். அதிக சதவீதமானவர்கள் பகிஷ்கரித்தார்கள் என்பதைக் குறிப்பிடலாமென பல்கலைகழக மாணவர்கள் சந்திப்பில் தெரிவித்தனர்.

தமிழ்மக்களின் நலன் நோக்கி, பொது நிலைப்பாடொன்றுக்கு வருவதற்கான இணக்க நிலை தோற்றுவிக்கப்பட்டிருப்பதாகவும், அது தொடர்பில் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினரே உத்தியோகபூர்வமான நிலைப்பாட்டை வெளியிடுவர் என்றும் சந்திப்பை முடித்துக் கொண்டு வெளியேறிய கட்சிகளின் பிரதிநிதிகள் குறிப்பிட்டனர்.

மேலும், நேற்றைய சந்திப்பு பயனுள்ளதாக அமைந்ததோடு அடுத்த சந்திப்பை எதிர்வரும் 7 ஆம் திகதி திங்கட்கிழமை நடாத்துவதற்கும் இணக்கம் காணப்பட்டிருப்பதாக அறிய வருகிறது.

இதேவேளை, இந்தச் சந்திப்புத் தொடர்பில் மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகளுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, தனித்தனியாக நிலைப்பாடுகளை வெளியிடாமல் தமது நிலைப்பாட்டை அறிக்கை வடிவில் ஊடகங்களுக்கு அனுப்பி வைக்கவிருப்பதாகவும் தெரிவித்தனர்.

எனினும் இந்தச் செய்தி வரையப்படும் வரை மாணவர் ஒன்றியத்திடமிருந்து அறிக்கைகள் எதுவும் கிடைக்கவில்லை.

இந்தச் சந்திப்பு இடம்பெற்ற வேளையில் வெளியார் எவரும் பொது அறைக்குள் செல்வதற்கு அனுமதிக்கப்படவில்லை. வெளியாட்கள் பலர் மாணவர் பொது அறைவரை – பல்கலைக்கழகத்தினுள் செல்வதற்கு அனுமதிக்கப்பட்ட போதும், செய்தி சேகரிப்புக்காகச் சென்ற ஊடகவியலாளர்களை பாதுகாப்பு ஊழியர்கள் பிரதான வாயிலுக்கூடாகச் செல்வதற்கு அனுமதிக்கப்படவில்லை. (ஐ-07)

## கொழும்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

எதிர்வரும் 10ஆம் கொழும்பு – காலி முகத்திடலில் பாரிய மக்கள் பேரணி இடம்பெறவுள்ளது. காலி முகத்திடலில் அதிகபட்சம் ஒன்றரை இலட்சம் மக்கள் மாத்திரமே ஒன்றிணைய முடியும். எனினும் எமது பேரணியில் சுமார் 3 இலட்சம் மக்கள் பங்குபற்றவுள்ளனர். எனவே காலி முகத்திடலுடன் அந்த பகுதியிலுள்ள பிரதான வீதியையும் பயன்படுத்த எதிர்பார்த்துள்ளோம். இது தொடர்பாக பொலிஸ் தலைமையகத்துக்கு அறிவித்துள்ளோம்.

சஜித் மீதான மக்களின் நம்பிக்கையையும் அவரது வெற்றியையும் உறுதி செய்யும் இந்த பேரணியால் கொழும்பிலுள்ள மக்கள் போக்குவரத்து உள்ளிட்ட பல்வேறு அசௌகரியங்களுக்கு முகங்கொடுக்க நேரிடும் என்பதால் எமது வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம் என மேலும் கூறினார். (ஐ)

## சாட்சிகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புலனாய்வுப் பிரிவின் பிரதானிகள் இருவர், சாட்சிகள் மற்றும் விடயங்களை மறைத்துள்ளதாக விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

ரி.ஐ.டியின் முன்னாள் பிரதானி பிரதிப் பொலிஸ்மா அதிபர் சந்திரா வாகிஸ்ட மற்றும் அப்போது அந்த புலனாய்வுப் பிரிவின் உதவி பொலிஸ் அத்தியட்சராக இருந்த பிரசன்ன அல்விஸ் ஆகியோர் இந்த நடவடிக்கையில் தொடர்புபட்டுள்ளனர் என தற்போது லசந்த விக்ரமதுங்க விவகாரத்தை விசாரணை செய்யும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கல்கிசை நீதிவான் நீதிமன்றுக்கும் அறிக்கை சமர்ப்பித்துள்ளனர்.

இந் நிலையில் அந்த் இரு ரி.ஐ.டி. முன்னாள் பிரதானிகள் தொடர்பிலும் விசேட விசாரணைகள் இடம்பெறுவதாகவும், ஏற்கனவே சாட்சிகளை மறைத்தமை தொடர்பில் கைதான கல்கிசை பிராந்திய பொலிஸ் அதிகாரிகள் தொடர்பில் எடுக்கப்பட்ட நடவடிக்கை இவர்கள் தொடர்பிலும் எடுக்கப்படும் வாய்ப்பு உள்ளதாக சி.ஐ.டி.யின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஐ)

## மனோ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கணேசன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

தனது முகப்புத்தகத்தில் அவர் நேற்று இட்டுள்ள பதிவிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

சிங்கள மக்கள் மத்தியில் (தமிழர், முஸ்லிம்களுக்கு எதிரான) இனவாதம்), தமிழ் முஸ்லிம் மக்கள் மத்தியில் (அரசுக்கு எதிரான) விரக்தி. ஆகியவற்றைத் தூண்டிவிட்டு, இவற்றினால் தம் வெற்றியை அறுவடை செய்யத் திட்டமிட்ட முயற்சி நடை பெறுகிறது எனவும் அவர் அந்தப் பதிவில் தெரிவித்துள்ளார். (ஐ)

## மைத்திரியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு அணியின் கீழ் களமிறங்கும் யோசனை கொண்ட கடிதம் ஒன்றை எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ தரப்பு நேற்று முன் தினம் ஜனாதிபதி மைத்திரிபாலசிறிசேனவுக்கு அனுப்பியுள்ளது.

இதன்படி ஜனாதிபதித் தேர்தலில் தாமரை மொட்டுச் சின்னத்தில் அல்லாமல் கதிரைச் சின்னத்தில் களமிறங்கலாமென ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் செயலாளர் சாகர காரியவசம் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

கோட்டாபய தாமரை மொட்டுச் சின்னத்தில் ஜனாதிபதித் தேர்தலுக்கான கட்டுப்பணம் செலுத்தியிருப்பதால் சட்டப்பிரச்சினை ஒன்று உருவாகும் சாத்தியம் இருப்பதாக அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் கட்டுப்பணம் செலுத்திய பின்னர் சின்னத்தை மாற்ற முடியுமெனச் சட்டத்தில் இருந்தால் அதன்படி செயற்பட ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன தயாரெனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இந்தப் பின்னணியில் – சட்டப் பிரச்சினைகளைத் தீர்ப்பது எப்படி என்று ஆலோசனைகளை நடத்தி அதன் பின் பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் ஸ்ரீ லங்கா பொதுஜன கூட்டமைப்பு என்ற பொது அணியின் கீழ் போட்டியிடுவதற்குத் தயாரென்றும் பொதுஜன பெரமுனவின் செயலாளர் அந்த கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையில் இந்த புதிய நிலவரங்கள் குறித்து ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன மற்றும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி எம்.பிக்கள் கூடி ஆராயவுள்ளனர். (ஐ)

## பிக்குகளைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்தில் நேற்றுக் காலை இந்தப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது முல்லைத்தீவு நீராவியடி பிள்ளையார் கோவில் விவகாரத்தில் நீதிமன்றம் வழங்கிய கட்டளையை மீறி பௌத்த பிக்குவின் உடல் ஆலயத் தீர்த்தக் குளத்தில் எரிக்கப்பட்டதை கண்டித்தும் அடாவடியில் ஈடுபட்ட ஞானசார தேரர் மற்றும் அவரது குழுவினரையும் கைது செய்ய வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது.

இந்தப் போராட்டத்தில் ரெலோ அமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் உட்பட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் பொது மக்கள் எனப் பெருமளவிலானோர் கலந்து கொண்டிருந்தனர். (ஐ-07)

## தமிழ்க் கட்சிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றியம் வரவேற்றுள்ளது.

இது தொடர்பில் மாணவர் ஒன்றியம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:–

தமிழ் மக்கள் நீண்ட காலமாகப் போராடிக் கொண்டிருப்பது தமக்கான நிரந்தரமான அரசியல் தீர்வொன்றைப் பெற்றுக்கொள்வதற்காகவே, இதுவரையில் பலவழிகளிலும் போராடிக் கொண்டிருக்கும் நிலையில் நாம் இன்று பல தரப்புக்களாக எம்முள் பிளவுபட்டு நின்கின்றோம்.

இதனால் நாம் எமது பேரம்பேசும் பலத்தை இழந்துவிடும் துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

எமது பேரம்பேசும் பலத்தைப் உறுதிப்படுத்த நாம் ஒருமித்த முடிவினை எடுக்க வேண்டியது என்பது காலத்தின் கட்டாய தேவையாகும்.

இத்தகைய சூழலைத் தமிழ் தரப்புக்கள் அனைத்தும் உணர்ந்து கொண்டு பிளவுபட்டு நின்ற கட்சிகள் அனைத்தும் ஒன்றாக கூடி கலந்துரையாடியமையும் ஆரோக்கியமாக கலந்துரையாடல்கள் இடம்பெற்று எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் தமிழ் தேசிய பாதையில் பயணிக்கும் கட்சிகள் ஒருமித்த நிலைப்பாடு ஒன்றை எடுக்க கொள்கை அளவில் இணக்கம் தெரிவித்துள்ளமையும் ஆரோக்கியமான ஒன்றே ஆகும்.

அதுமாத்திரமின்றி தமிழ் கட்சிகள் சார்பில் தலா இரண்டு பேர் கொண்டதாக குழு ஒன்றினை இன்றைய கலந்துரையாடலில் நியமித்துள்ளோம். அதனடிப்படையில் தொடர்ந்து நாளைமறுதினம் திங்கட்கிழமை அன்று மீண்டும் கூடிக் கலந்துரையாடுவதாகத் தீர்மானிக்கப்பட்டது.

தொடர்ந்து, பிரதான ஜனாதிபதி வேட்பாளர்களுடன் நாம் நிபந்தனைகளை முன்வைத்து பேரம்பேசுதல் என்றும் அத்தகைய நிபந்தனைகளினை அடுத்த கலந்துரையாடலில் முடிவு செய்வது என்றும் அதனடிப்படையில் பேரம் பேசலில் ஈடுபடுவது என்றும் அத்தகைய பேரம்பேசல் வெற்றியளிக்காத பட்சத்தில் அடுத்த கட்டத்தில் நாம் எத்தகைய முடிவொன்றை எடுக்க வேண்டும் என்பதை தொடர்ந்தும் கலந்துரையாடுவது என்றும் இன்றைய கலந்துரையாடலின் போது தீர்மானிக்கப்பட்டது – என்றுள்ளது. (ஐ-07)

## மஹிந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினை மற்றும் அன்றாட – அவசர – நெருக்கடி ஆகியவற்றுக்கான தீர்வுகளாக நீங்கள் முன்வைக்கக்கூடிய யோசனைகள் தொடர்பில் உங்களிடம் ஒரு தெளிவான திட்டம் இல்லாமல் சந்தித்துப் பேசுவதில் பலன் விளையாது என சுமந்திரன் நேரடியாகவே கோட்டாபயவுக்குச் சுட்டிக் காட்டினார் எனவும் அறியவந்தது.

இரண்டு தடவைகள் மஹிந்த ராஜபக்ஷவுடன் சந்தித்துப் பேசிவிட்டேன். ஆனால் அவர் உருப்படியான – தெளிவான – யோசனைத் திட்டம் எதையும் வெளிப்படுத்தவில்லை." – என்ற அதிருப்தியையும் கோட்டாபயவுக்கு சுமந்திரன் தெரியப்படுத்தினார் என்றும் கூறப்பட்டது.

அப்படியான யோசனைகள் குறித்துப் பேசித் தீர்மானிக்கவே நாங்கள் மூவரும் (மஹிந்த, பஸில், கோட்டா) உங்கள் தரப்பைச் சந்தித்துப் பேச விரும்புகிறோம் எனக் கோட்டா தரப்பில் பதிலளிக்கப்பட்டதாம்.

நீங்கள் மருத்துவ சிகிச்சைக்காக சிங்கப்பூர் போகின்றீர்கள். அதற்கு முன்னர் சந்திக்கலாமா அல்லது நீங்கள் சிங்கப்பூர் சென்று திரும்பிய பின்னர் சந்திக்கலாமா?– என சுமந்திரன் கோட்டாபயவிடம் கேட்டார்.

சகோதரர்கள் மஹிந்த ராஜபக்ஷ, பஸில் ராஜபக்ஷ ஆகியோரின் நேர வசதியை அறிந்து கொண்டு மீண்டும் சுமந்திரனுடன் தாம் தொடர்பு கொள்வார் எனக் கோட்டா பதிலளித்திருக்கின்றார்.

தமிழர் தரப்புடன் தீர்க்கமான முடிவு ஒன்றை எடுப்பதற்கு மஹிந்தர், கோட்டா, பஸில் ஆகிய மூவரும் தீர்மானித்திருக்கின்றனர் என்று அவர்கள் தரப்புச் செய்திகள் தெரிவித்தன. (உ)

## கோட்டாபய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபயவின் இலங்கைப் பிரஜாவுரிமையைச் சவாலுக்குட்படுத்தி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனு நீதியரசர்களால் தள்ளுபடி செய்யப்பட்டது.

இந்த விடயம் தொடர்பாக ஐ.தே.கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவிடம் சர்வதேச செய்திச் சேவையொன்றின் கொழும்புச் செய்தியாளர் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

கோட்டாபய எனக்குச் சவால் அல்ல. இதனை நான் பல தடவைகள் கூறியுள்ளேன். அதே வேளை, நானும் தனக்குச் சவால் அல்ல என்று கோட்டாபயவும் பல தடவைகள் தெரிவித்துள்ளார்.

ஆனால், மக்களின் வாக்குகள்தான் வெற்றி, தோல்வியைத் தீர்மானிக்கப் போகின்றன. பெரும்பாலான மக்கள் கோட்டாபயவைத் தோற்கடிக்கத் தயாராகவுள்ளனர். எனவே, அவரின் தோல்வி உறுதி என்றே நான் நம்புகின்றேன் – என்றார். (ஐ)

## அத்துரலிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ராஜபக்ஷவுக்கு ஆதரவளித்துள்ளார்.

ஐக்கிய தேசிய முன்னணி சார்பில் நாடாளுமன்றுக்குத் தெரிவாகிய அத்துரலிய ரத்ன தேரர், தேசிய அரசு பதவிக் காலத்தில் நாடாளுமன்றில் சுயாதீனமாக இயங்க ஆரம்பித்தார்.

இந்த நிலையில் அவர், பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு தனது ஆதரவை வழங்கியுள்ளார். (ஐ)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## தமிழரசின் வழவழாப் போக்கு

சரியோ, பிழையோ இன்றைய நிலையில் தமிழர் தரப்பில் அதிக மக்கள் பிரதிநிதித்துவம் கொண்ட – மூத்த – பிரதான – கட்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.

அதிலும் அந்தக் கூட்டமைப்பில் பிரதான வகிபாகம் கொண்டது இலங்கைத் தமிழரசுக் கட்சிதான்.

அந்த முதிர்வை அந்தக் கட்சியும் அதன் மூத்த தலைவர்களும் வெளிப்படுத்த வேண்டும். அதை சமூகம் – இனம் – உரிமையுடன் எதிர்பார்க்கின்றது.

ஆனால் அதன் மூத்த தலைவர்கள் அப்படி நடப்பவர்களாகத் தெரியவில்லை என்பதுதான் வேதனையான – துரதிர்ஷ்டவசமான – நிலைமையாகும்.

தற்போது நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலை ஒட்டி தமிழர் தரப்பு எப்படி நடந்து கொள்வது, என்ன செய்வது, எதைச் செய்யாமல் விடுவது என்பது பற்றி எல்லாம் மக்களும், சமூகத் தலைவர்களும் பதறியடித்துக் கொண்டிருக்க, அது குறித்து மக்கள் மட்டத்தில் போதிய ஊடாட்டத்தை நடத்தாமல் கூட்டமைப்புத் தலைமை தன்பாட்டில் காய் நகர்த்திய படி பம்மிக் கொண்டிருந்தது; இருக்கிறது.

குறைந்த பட்சம் தமது மக்களின் கருத்துக்களை செவிமடுக்கிறோம் என்று காட்டுவதற்கு ‘ஒப்புக்குச் சப்பாணி போல’ மக்கள் சந்திப்புக்களை நடத்தி கலந்துரையாடல்களை முன்னெடுத்திருக்க வேண்டும்.

தேசிய மட்டத்தில் தேர்தல். கூட்டமைப்பின் தேசிய மட்டத் தலைவர்கள் கொழும்பில் அது தொடர்பான ஊடாட்டங்களில் படு ‘பிஸி’. – இங்கு தமிழர் தாயகத்தில் அது குறித்துப் பேசுவோரோ, மக்களின் கருத்துக்களை உள்வாங்குவோரோ இல்லை.

இதனால், மதத் தலைவர்கள், கல்விமான்கள், அரசியல் விமர்சகர்கள், ஊடகவியலாளர்கள் என சமூகத்தின் பல திறத்தாரையும் கொண்ட ‘சுயாதீனக்குழு’ ஒன்றை அமைத்துக் காரியங்களை முன்னெடுக்க வேண்டிய கட்டாயம் தனித்துவமான தமிழர் தரப்புகளுக்கு ஏற்பட்டது.

அந்த சுயாதீனக் குழுவுடனான ஊடாட்டாத்திலாவது கூட்டமைப்புத் தலைவர்கள் வெளிப்படையாகவும் பட்டவர்த்தனமாகவும் பேசியிருந்தால் வீண் முரண்பாடுகள், தேவையற்ற மன வேறுபாடுகள் ஏற்பட்டிருக்க மாட்டா.

கூட்டமைப்பின் தலைவர்களான இரா. சம்பந்தனும் மாவை சேனாதிராசாவும் இந்த விடயத்தில் வெளிப்படையாகவும் உண்மையாகவும் நடந்து கொள்ளவில்லை என்பதுதான் எங்களது ஆதங்கம்.

மேற்படி சுயாதீனக் குழுவின் பிரதிநிதிகள் – மரியாதைக்குரிய சுவாமிமார்கள், கல்விமான்கள், அரசியல் விமர்சகர்கள், ஊடகவியலாளர்கள் போன்றோர் – சம்பந்தன் ஐயாவையும், மாவை சேனாதிராசாவையும் சந்தித்தபோது தமிழர் தேசத்தின் சார்பில், அவர்களின் கருத்து நிலைப்பாட்டை வெளிப்படுத்தும் விதத்தில் ஒரு பொது தமிழ் வேட்பாளரை நிறுத்துவது குறித்துப் பிரஸ்தாபித்தனர்.

அது தொடர்பில், சம்பந்தன், மாவை ஆகியோரின் தமிழரசுக் கட்சியின் நிலைப்பாட்டை அக்கட்சியின் செயலாளர் க.துரைராஜசிங்கம் மட்டக்களப்பில் வெட்டவெளிச்சமாகவும், தெட்டத் தெளிவாகவும் வெளிப்படுத்தியிருக்கின்றார்.

“இத்தேர்தலில் சிறுபான்மை சமூகத்தவர் வெற்றி பெறுவதற்கு வாய்ப்பே இல்லை. ஆகவே இத்தேர்தலில் தமிழர்கள் ஒரு வேட்பாளரை நிறுத்துவது உகந்த விடயம் அல்ல. அப்படி தமிழர்கள் ஒரு வேட்பாளரை நிறுத்துகின்றமை தோல்வியடையும் நிலையிலுள்ள பிறிதொரு வேட்பாளரை வெற்றியடையச் செய்யும் செயற்பாடு ஆகிவிடும்” – என துரைராஜசிங்கம் கூறியிருக்கின்றார்.

அதுதான் கூட்டமைப்பின் பிரதான கட்சியான இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நிலைப்பாடு என்பதை ஒரளவுக்கு ஊகித்துப் புரிந்து கொள்ளவும் முடிகின்றது.

சரி. இதுதான் நிலைப்பாடு என்றால் அதைத் தம்மைச் சந்தித்த ‘சுயாதீனக் குழு’விடம் சம்பந்தனும் மாவையும் நேரடியாகத் தெரிவிப்பதுதானே...? அதில் என்ன ஒளித்துப் பிடித்து விளையாடும் தேவை இருக்கின்றது?

“இது குறித்து நீங்களும் யோசியுங்கள்; நானும் யோசிக்கின்றேன்...!” – என்று சம்பந்தன் ஏன் அந்தக் குழுவினருக்குக் கயிற்றைக் கொடுக்க வேண்டும்?

“ஓம். [பொது வேட்பாளர் குறித்துப்] பேசுவோம்” – என்று தமிழரசுத் தலைவர் மாவை சேனாதிராசா ஏன் அவர்களுக்கு நம்பிக்கையூட்ட வேண்டும்?

சம்பந்தனும், மாவை சேனாதிராசாவும் தங்கள் கட்சியின் நிலைப்பாட்டை – பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தும் எண்ணம் தங்களுக்கு இல்லை என்றோ, அதற்குத் தாங்கள் உடன்படவில்லை என்றோ – வெளிப்படையாகக் கூறியிருந்தால், மேற்படி சுயாதீனக் குழுவினர் கடைசி நேரம் வரை அதற்காக விழுந்தடித்து ஓடியிருக்க மாட்டார்களோ என்னவோ?

அப்படியில்லாமல், சம்பந்தனுடனான சந்திப்புக்கு சுமந்திரன் வரக் கூடாது என நிபந்தனை விதித்து, மேற்படி சுயாதீனக் குழு சுமந்திரனை வெட்டி ஓடியிருக்காவிட்டால், சம்பந்தனுடனான சந்திப்பின்போதே கூட்டமைப்பின் நிலைப்பாட்டை பட்டவர்த்தனமாக – வெட்ட வெளிச்சமாக – சுமந்திரன் போட்டு உடைத்திருப்பாரோ என்னவோ?

எது, எப்படி என்றாலும் இறுதி நேரம் வரை தமிழர் சார்பில் ஒரு பொது வேட்பாளரைக் களம் இறக்க வேண்டும் என்ற முயற்சியில் பல தரப்புகளும் முண்டியடித்து முயன்று கொண்டிருக்கின்றமைக்கு இது விடயத்தில் திட்டவட்டமான ஒரு நிலைப்பாட்டை அறிவிக்காமல், கழுவுற தண்ணியில் நழுவுகிற மீன் மாதிரி, வழ வழா கொழ கொழா பாணியில் இலங்கைத் தமிழரசுக் கட்சியினர் – குறிப்பாக அதன் தலைவர்கள் – நடந்து கொண்டமையே காரணம். அது மறுக்க முடியாத உண்மை.

# சிறை செல்ல நேரிடுமோ என ரணிலுக்கு பயம் வந்துவிட்டது

## கூறுகிறார் மஹிந்த யாப்பா



கொழும்பு, ஒக். 06

ஆட்சி மாற்றம் ஏற்பட்டால் தான் சிறைக்குச் செல்ல நேரிடும் என்பதை அறிந்தே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிராகப் பல சட்டச் சிக்கல்களை ஏற்படுத்துவதாக நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமை காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக் கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

ஐக்கிய தேசிய கட்சியின் முழு ஒத்துழைப்புடனே மத்திய வங்கி பிணைமுறி இடம்பெற்றது. அமைச்சரவையில் உள்ள பெரும்பாலானோர் இந்த மோசடியுடன் தொடர்புடையவர்கள்.

அவர்களே இன்று ஐக்கிய தேசிய கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவாக அணிதிரண்டுள்ளனர்.

பிணைமுறி மோசடி விவகாரம் குறித்து ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ இதுவரையில் எவ்வித கருத்துக்களையும் தெரிவிக்கவில்லை. அவ்வாறு தெரிவித்தால் கட்சியின் ஆதரவு கிடைக்காது.

எதிர்க்கட்சி தலைவர் மஹிந்தவின் ஆட்சி தோற்றம் பெற்றால் மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன மகேந்திரன் நாட்டுக்கு அழைத்து வரப்படுவார். அதன் பின்னர் தான் சிறைக்குச் செல்ல நேரிடும் என்பதை அறிந்தே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபயவிற்கு எதிராக பல சட்டச் சிக்கல்களை ஏற்படுத்துகிறார் – என்றார். (ஐ)

# தேர்தல் செயலகத்தைச் சுற்றி 2000 பொலிஸார் பாதுகாப்பு!



கொழும்பு, ஒக். 06

நாளை வேட்புமனு தாக்கல் இடம்பெறவுள்ளதால், தேர்தல் ஆணைக்குழு மற்றும் அங்கு வருகை தருவோரின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக இன்று காலை முதல் ராஜகிரிய பிரதேசத்தில் விசேட அதிரடிப்படையினர் உள்ளிட்ட சுமார் 02 ஆயிரம் பொலிஸ் உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

புலனாய்வு அதிகாரிகளும் இங்கு கடமைகளை முன்னெடுக்கவுள்ளனர். வேட்புமனுத் தாக்கலுக்கு முன்னரும் பின்னரும் வீதிகளில் ஊர்வலங்கள் செல்வதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வேட்புமனு தாக்கல் செய்ய வருவாராயின் பாதுகாப்பு மேலும் இரட்டிப்பாக்கப்படும்.

அனுமதி வழங்கப்பட்டவர்களுக்கு மட்டுமே நாளை சரண மாவத்தை மற்றும் தேர்தல் ஆணைக்குழுவுக்கு வர அனுமதிக்கப்படும். அனைவரும் சோதனைகளுக்குப் பின்னரே உள்ளே அனுமதிக்கப்படுவர். இதற்காக 10 சோதனைச்சாவடிகள் தயார்படுத்தப்படும்.

ராஜகிரியப் பகுதியில் போக்குவரத்துக்காக 500 பொலிஸாரும் ஏனைய சோதனை நடவடிக்கைகளுக்காக 1200 பொலிஸாரும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அதற்கு மேலதிகமாக பொலிஸ் விசேட அதிரடிப்படையினரும் புலனாய்வுப் பிரிவினரும் ஞாயிற்றுக் கிழமை முதல் பாதுகாப்பு ஏற்பாடுகளை முன்னெடுப்பர்.(ஐ)

# றுகுணு பல்கலையில் பகிடிவதை முற்றாக ஒழிக்கப்பட்டுவிட்டதாம்!




கொழும்பு, ஒக். 06

பகிடிவதைக் கொடுமைக்குப் பெயர் பெற்ற றுகுணு பல்கலைக்கழகத்தில் பகிடிவதை முற்றாக ஒழிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார் துணைவேந்தர்.

பகிடிவதை காரணமாகப் பல்கலைகழகக் கல்வியைப் பாதியில் கைவிட்டவர்கள், அதை தொடர வாய்ப்பளிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

றுகுணுப் பல்கலைகழகத்தில் இடம்பெற்ற பகிடிவதை தொடர்பாக காணொலியொன்று சமூக வலைத்தளங்களில் வைரலாகப் பரவி வருகிறது.

அது குறித்து கருத்து தெரிவித்த துணைவேந்தர், இது ஒரு கடந்த கால சம்பவம். இது மார்ச் 13 மற்றும் 14 ஆகிய திகதிகளில் மேல் மாடியில் உள்ள கன்ரீனில் நிகழ்ந்தது என்று கூறினார்.

இந்த மோசடி தொடர்பாக ஒரு தொலைபேசி அழைப்பு வந்ததும், சுமார் 50 விரிவுரையாளர்கள் பகிடிவதை நடந்த இடத்திற்கு வருகை தந்தனர். புதிய மாணவர்களைக் கொடுமைப் படுத்துபவர்கள் விரிவுரையாளர்களைப் பார்த்ததும் அங்கிருந்து தப்பி ஓடிவிட்டனர். அந்த இடத்தைப் பார்வையிட்டு, பகிடிவதையைத் தடுத்த விரிவுரையாளர்களுக்கு நான் நன்றி கூறுகிறேன். இந்தச் சம்பவத்தை நான் பின்னர் ஊடகங்களுக்குத் தெரிவித்தேன் என்றும் அவர் குறிப்பிட்டார்.

பகிடிவதைக்கு உட்படுத்தப்பட்ட மாணவர்களிடம், குற்றவாளிகள் மீது முறைப்பாடு அளிக்குமாறு தாங்கள் குறிப்பிட்டபோதும், இதுவரை யாரும் முறைப்பாடளிக்கவில்லையென்றும் துணைவேந்தர் தெரிவித்தார். (ஐ)

**நாளை** 07.10.2019 திங்கட்கிழமை

நட்சத்திரம்: உத்தராடம் இ 9.31 வரை
இராகுகாலம் : 7.32 – 9.02
திதி : நவமி பி.ப 4.21 வரை
சுப நேரம் : 12.02 – 1.32

# முன்னாள் ஜனாதிபதிகளின் சுகபோகங்களுக்கு அதிக நிதி

## அநுரகுமார குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக். 06

தற்போதைய ஜனாதிபதி மட்டுமல்ல முன்னாள் ஜனாதிபதிகளின் சுகபோகங்களுக்கும் அதிக பணத்தை இந்த அரசு செலவிடுகின்றது என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க குற்றம் சுமத்தியுள்ளார்.

எல்பிட்டிய பகுதியில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அநுர குமார திஸாநாயக்க மேலும் கூறியுள்ளதாவது–

தற்போதை ஜனாதிபதி மட்டுமல்ல முன்னாள் ஜனாதிபதிகளின் சுகபோகங்களுக்கும் அதிக பணத்தை இந்த அரசாங்கம் செலவிடுகின்றது.

முன்னாள் ஜனாதிபதியின் பிள்ளைகள் மற்றும் அவர்களின் உறவினர்கள் உள்ளிட்டோரின் சுகபோகங்களுக்குக் கூட இந்த அரசாங்கம்தான் நிதி வழங்குகின்றது.

வாகனம், உணவு உள்ளிட்ட முக்கிய செயற்பாடுகளுக்கான செலவீனங்கள் அனைத்துக்கும் அரசாங்கத்திலிருந்தே முன்னாள் ஜனாதிபதிகளுக்கு நிதி கிடைக்கின்றது.



இவையனைத்துக்கும் ஒரு முடிவு கட்டப்பட வேண்டும். அதாவது முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வழங்கப்படுகின்ற அரச நிதியை நிறுத்த வேண்டும்.

இல்லாவிடின் முன்னாள் ஜனாதிபதிக்கு இருப்பதற்கு கூட இடமில்லை, வருமானத்தைப் பெற்றுக்கொள்வதற்கு வழியில்லை என்றால் மாத்திரம் குறிப்பிட்ட தொகையை அரசு வழங்குவது சிறந்தது.

இவ்வாறான காரணங்கள் ஏதுமின்றி முன்னாள் ஜனாதிபதிகளுக்கு சலுகைகள் ஏதும் வழங்கக்கூடாது.

மேலும் நாட்டின் அரசியல்வாதிகள் ஊழல் மற்றும் சட்டவிரோத நடவடிக்கைகளில் நேரடியாக ஈடுபட்டு வருகின்றனர்.

ஆகையால் மோசடி மற்றும் ஊழல் செய்த அனைவருக்கும், நாம் ஆட்சிக்கு வந்தவுடன் சட்ட ரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்வோம் – என்றார். (ஐ)

# புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகள் அடுத்த வாரத்தில்

கொழும்பு, ஒக். 06

2019ஆம் ஆண்டுக்கான தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகள் எதிர்வரும் வாரம் வெளியிடப்படவுள்ளன.

பரீட்சை முடிவுகள் நேற்று வெளியிடப்படுமென அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகப் பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய பரீட்சை முடிவுகளை பரீட்சைகள் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் எதிர்வரும் வாரம் முதல் பார்வையிட முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஓகஸ்ட் மாதம் நடைபெற்று முடிந்த தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் சிங்கள மொழி மூலமாக 2 இலட்சத்து 55 ஆயிரத்து 529 மாணவர்கள் தோற்றியிருந்தனர். அதேபோன்று தமிழ் மொழி மூலமாக 83 ஆயிரத்து 840 மாணவர்களும் தோற்றிருந்தனர்.

இரண்டாயிரத்து 995 பரீட்சை மத்திய நிலையங்களில் பரீட்சை நடைபெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது

# யூனியன் கல்லூரியில் நடந்த வலி. வடக்கு கலாசார விழா







யாழ்ப்பாணம், ஒக். 06

வட மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் வலிகாமம் வடக்கு தெல்லிப்பழை பிரதேச செயலகமும் கலாசாரப் பேரவையும் இணைந்து நடத்திய கலாசார விழா தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது.

வலிவடக்குப் பிரதேச செயலரும் கலாசார பேரவையின் தலைவருமான சண்முகராஜா சிவசிறி தலைமையில் கல்லூரியின் பிரதான மண்டபமான அமரர் கலாநிதி என்.கே.பத்மநாதன் அரங்கில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நடந்த இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் கலந்து சிறப்பித்தார்.



இந் நிகழ்வில் விருந்தினர்கள் மாலை அணிவிக்கப்பட்டு கலாசார பண்பாட்டு முறையில் வரவேற்கப்பட்டு மங்கல விளக்கேற்றலுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின. இதன்போது மங்கல வாத்தியங்கள் இசைக்கப்பட்டதுடன் கலை கலாசார நிகழ்வுகளும் இடம்பெற்றன.

நிகழ்வில் தெல்லிப்பளை உதவிப் பிரதேச செயலர், யாழ் பல்கலைக்கழக இந்து நாகரீகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் சி.ரமணராஜா, யூனியன் கல்லூரி அதிபர் தி.வரதன், உள்ளிட்டவர்கள் விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர். (ஐ – 07)





# சரத் பொன்சேகாவும் பெரமுனவின் பக்கம்

## மஹிந்த தரப்பு நம்பிக்கை

கொழும்பு, ஒக். 06

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா, மிக விரைவில் இணைவார் என நம்புகிறார் என கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிசிர ஜயகொடி தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் குறித்து கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். சிசிர ஜயகொடி மேலும் கூறியுள்ளதாவது, எதிர்வரும் நாள்களில் பொதுஜன பெரமுனவுடன் பல்வேறு தரப்பட்ட கட்சிகளும் வந்து இணைந்து கொள்ளவுள்ளன எனத் தகவல்கள் கிடைத்துள்ளன.

இந்நிலையில் நாடு, இனம் மற்றும் மதம் குறித்து சரத் பொன்சேகாவுக்கு மிகவும் தெளிவான சிந்தனையுள்ளது.

அந்தவகையில் அவரும் கூட, மிக விரைவில் எமது கட்சியுடன் வந்து இணைந்து கொள்ளுவாரென எதிர்பார்க்கின்றோம் என குறிப்பிட்டுள்ளார்.



ஜனாதிபதி தேர்தல் எதிர்வரும் நவம்பர் மாதம் 16ஆம் திகதி இடம்பெறவுள்ளது. இந்நிலையில் தேர்தலில் களமிறங்கவுள்ள வேட்பாளர் குறித்து ஒவ்வொரு கட்சியினரும் அறிவித்து வரும் நிலையில், பலர் கட்டுப்பணத்தைச் செலுத்தியுள்ளனர்.

இந்நிலையில் தற்போது, முக்கிய கட்சிகளாக பார்க்கப்படுகின்ற பொதுஜன பெரமுன மற்றும் ஐக்கிய தேசியக்கட்சி தங்களது கட்சியை பலப்படுத்தும் வகையில் ஏனைய பெரும்பாலான கட்சிகளுடன் கூட்டணி பேச்சுவார்த்தையில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றன.

இந்நிலையிலேயே பொதுஜன பெரமுனவுக்கு சரத் பொன்சேகா ஆதரவு வழங்குவாரென நம்புகிறார் என சிசிர ஜயகொடி தெரிவித்துள்ளார்.

# மின்தடை

யாழ்ப்பாணம், ஒக். 06

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை திங்கட்கிழமை காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை–

**வவுனியா பிரதேசத்தில் –**

செட்டிகுளம் ஒரு பகுதி, முகத்தான்குளம், முதலியார்குளம், கப்பாச்சி, துட்டுவாகை, நேரியகுளம், தந்திரிமலை வீதி, சின்னசிப்பிகுளம், அழகாபுரி, NW steel Industries இலுப்பைக்குளம், கஜசிங்கபுர இராணுவ முகாம் ஆகிய பிரதேசங்களிலும்– மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

காலைக்கதிர்
Kalaikathir



# கார் – அம்புலன்ஸ் பயங்கர மோதல் நான்கு பேர் உடல் நசுங்கி உயிரிழப்பு

ஐதராபாத்,ஒக்.06

தெலுங்கானா மாநிலத்தில் அம்புலன்ஸ் – கார் மோதிய விபத்தில் 4 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

தெலுங்கானா மாநிலம் முளுகா பகுதியில் இருந்து வாராங்கல் நோக்கி கார் ஒன்று சென்றுகொண்டிருந்தது. கார் கடாக்ஷபூர் என்ற பகுதியை கடந்தபோது ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்து சாலையின் எதிரே வந்துகொண்டிருந்த கார் மற்றும் அம்புலன்ஸ் மீது அடுத்தடுத்து மோதியது.



விபத்துக்குள்ளான கார் மற்றும் அம்புலன்ஸ்

இந்த விபத்தில் காரில் பயணம் செய்த 4 பேர் சம்பவ இடத்திலேயே உடல் நசுங்கி பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும், சிலர் படுகாயமடைந்தனர்.

விபத்துக் குறித்து தகவலறிந்த பொலிஸார் சம்பவ இடத்திற்கு விரைந்த சென்று படுகாயமடைந்து உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த 3 பேரை மீட்டு சிகிச்சைக்காக அருகில் உள்ள மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தனர். மேலும், இந்த விபத்துக்கான காரணம் குறித்து விசாரணை நடைபெற்றுவருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# அசுத்தமான ரயில் நிலையங்களில் முன்னிலை வகிக்கின்றது சென்னை!



சென்னை பெருங்களத்தூர்



ராஜஸ்தான்

புதுடில்லி,ஒக்.06

இந்தியாவின் அசுத்தமான ரயில் நிலையங்களில் முதல் 10 இடங்களில் தமிழகத்தை சேர்ந்த 6 ரயில் நிலையங்கள் இடம் பெற்றுள்ளன. சென்னை பெருங்களத்தூர் நிலையம் முதல் இடத்தைப் பெற்றுள்ளது

இந்தியாவில், 407 ரயில் நிலையங்களின் தூய்மைத்திட்டப் பணிகளை, 2016ஆம் ஆண்டு முதல் ரயில்வே துறை ஆய்வு செய்துவருகிறது. நடப்பு ஆண்டில் இந்த ரயில் நிலையங்களின் எண்ணிக்கை, 720 ஆக உயர்த்தப்பட்டது. முதன் முறையாக, புறநகர் ரயில் நிலையங்களிலும் தூய்மைப் பணிகள் குறித்து ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. அதன்படி, நாட்டிலேயே தூய்மையான மற்றும் அசுத்தமான 10 ரயில் நிலையங்களின் பட்டியலை ரயில்வே அமைச்சகம் வெளியிட்டது.

இதில் சுத்தமான ரயில் நிலையங்களின் பட்டியலில் முதல் மூன்று இடங்களில் ராஜஸ்தான் மாநிலத்தில் உள்ள ரயில் நிலையங்கள் இடம்பெற்றுள்ளன.

அதேபோன்று அசுத்தமான ரயில் நிலையங்களின் பட்டியலில் தமிழகத்தை சேர்ந்த 6 ரயில் நிலையங்களின் பெயர்கள் இடம்பெற்றுள்ளன. இதில் சென்னை பெருங்களத்தூர் ரயில் நிலையம் முதலிடத்தையும், கிண்டி ரயில் நிலையம் இரண்டாவது இடத்தையும் பிடித்துள்ளன.

# அமெ. தேசியப் பாதுகாப்பு ஆலோசகருடன் இந்திய வெளிவிவகார அமைச்சர் சந்திப்பு

வொஷிங்டன்,ஒக்.06

அமெரிக்கத் தேசியப் பாதுகாப்பு ஆலோசகரை இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் சந்தித்து, முக்கிய பிரச்சினைகள் குறித்து ஆலோசனை நடத்தினார்.

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் ஐ.நா. பொதுச்சபை கூட்டத்தில் இந்தியப் பிரதமர் மோடியுடன் வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் கலந்துகொண்டார். அதைத் தொடர்ந்து, ஜெய்சங்கர் வொஷிங்டன் சென்றார்.

அங்கு அவர் முதலில் அந்த நாட்டின் வெளியுறவு அமைச்சர் மைக் பாம்பியோவை சந்தித்து



இரு தரப்பு உறவுகளை வலுப்படுத்துவதற்கான வாய்ப்புகள் குறித்து விரிவான ஆலோசனை நடத்தினார்.

இது குறித்து அமெரிக்க வெளியுறவுத்துறை ஓர் அறிக்கை வெளியிட்டது. அதில், வெளியுறவு அமைச்சர் மைக் பாம்பியோ, இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கரை சந்தித்து இரு தரப்பு பாதுகாப்பு உறவு, காஷ்மீர் விவகாரம் உள்ளிட்ட பிற பிரச்சினைகள் குறித்து விவாதித்தார் எனக் கூறப்பட்டுள்ளது.

இதையடுத்து ஜெய்சங்கர், அந்த நாட்டின் புதிய தேசிய பாதுகாப்பு ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ள ரொபர்ட் ஓ பிரையனைச் சந்தித்துப் பேசினார்.

இதையொட்டி ஜெய்சங்கர் டுவிட்டரில் வெளியிட்ட பதிவில், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ரொபர்ட் ஓ பிரையனை சந்தித்ததில் மகிழ்ச்சி. முக்கிய பிரச்சினைகள் குறித்து ஆலோசனை நடத்தப்பட்டது என கூறி உள்ளார்.

# பிரதமர் மோடிக்குக் கடிதம் எழுதியமைக்காக மணிரத்னம், ரேவதி மீது தேசத்துரோக வழக்கு

சிறுபான்மையினருக்கு எதிரான வன்முறை குறித்து பிரதமர் மோடிக்கு கடிதம் எழுதிய விவகாரத்தில் இயக்குநர் மணிரத்னம், நடிகை ரேவதி உள்பட 49 பிரபலங்கள் மீது பீகார் பொலிஸார் தேசத்துரோக வழக்குப்பதிவு செய்தனர்.

இந்தியாவில் நடக்கும் கும்பல் வன்முறையைக் கண்டித்தும், இதில் பிரதமர் தலையிடக் கோரியும், ஜூலை 23 ஆம் திகதி பிரபலமானவர்கள் பிரதமர் நரேந்திர மோடிக்கு கடிதம் எழுதினர்.

இயக்குநர் மணிரத்னம், திரைப்படத் தயாரிப்பாளர் ஷியாம் பெனகல், அபர்ணா சென், பாடகர் சுபா முத்கல், வரலாற்று ஆய்வாளர் ராமச்சந்திர குகா, பிரபல வங்காள திரைப்பட நடிகர் சவுமித்ரா சாட்டர்ஜி, நடிகை ரேவதி, சமூக சேவகர் பினாயக் சென், சமூகவியலாளர் ஆஷிஷ் நந்தி, நடிகரும், இயக்குநருமான அனுராக் காஷ்யாப் உள்பட முக்கியமான பிரபலங்கள் 49 பேர் அந்த கடிதத்தை மோடிக்கு எழுதினர்.

அதில் அவர்கள் கூறியிருந்தவை வருமாறு:-

எங்கள் அன்பான இந்திய நாட்டில் சமீபகாலமாக பல்வேறு சோக சம்பவங்கள் நடைபெற்று வருகின்றன. அவற்றைப் பார்க்கும்போது, அமைதியை விரும்பும் இந்தியர்கள் என்பதில் பெருமை கொள்ளும் எங்களுக்கு மிகவும் கவலையாக இருக்கிறது.





முஸ்லிம்கள், தலித்துகள், பிற சிறுபான்மை இனத்தவர்களைக் கும்பல் அடித்துக் கொல்வதை உடனடியாக நிறுத்த வேண்டும். 2016 ஆம் ஆண்டு தலித்துகளுக்கு எதிராக நாட்டில் 840க்கும் மேற்பட்ட வன்முறைகள் நடத்தப்பட்டன எனத் தேசிய குற்ற ஆவணக் காப்பகப் புள்ளிவிவரத்தின் மூலம் தெரியவந்துள்ளது. இதனால் நாங்கள் அதிர்ச்சி அடைந்தோம்.

அதேபோல் 'ஜெய் ஸ்ரீராம்' என்ற கோஷத்தை ஆயுதமாக்கி சிறுபான்மையினருக்கு எதிராக பல வன்முறைச் சம்பவங்கள் நடைபெறுகின்றன. இவற்றைத் தடுக்க நீங்கள் (பிரதமர்) எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. கும்பலாகச் சேர்ந்து அடித்துக் கொல்லும் சம்பவங்களை நாடாளுமன்றத்தில் நீங்கள் கண்டித்தீர்கள். அது போதாது. அந்தக் குற்றங்களில் ஈடுபட்டவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

ராமர் பெயரில் சிறுபான்மையினரைப் பயமுறுத்தும் நடவடிக்கைகளை நிறுத்துங்கள். கருத்து வேறுபாடுகள் இல்லாமல் ஜனநாயகம் இல்லை. எனவே, கருத்து வேறுபாடு கொண்டவர்களை 'தேசத்துக்கு எதிரானவர்கள்' என்றும், 'நகர நக்சல்கள்' என்றும் முத்திரை குத்திவிடக் கூடாது. – இவ்வாறு அதில் கூறப்பட்டு இருந்தது.

இந்தக் கடிதத்துக்கு எதிராக பீகார் மாநிலம், முசாபர்பூரைச் சேர்ந்த சட்டத்தரணி சுதீர் குமார் ஓஜா அங்குள்ள நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார். அதில், 49 பிரபலங்கள் பிரதமர் மோடிக்கு எழுதிய கடிதம் நாட்டின் தோற்றத்தை அவமானப்படுத்துவது போன்று இருக்கிறது. பிரதமர் மோடியின் பணியையும், செயலையும் குறைத்து மதிப்பிடுவது போல் இருக்கிறது. அதனால், அவர்கள் மீது குற்றச்சாட்டுப் பதிவு செய்ய உத்தரவிட வேண்டும் என்று கூறி இருந்தார்.

இதையடுத்து, ஒகஸ்ட் 20 ஆம் திகதி முசாபர்பூர் தலைமை நீதிபதி சூர்ய காந்த் திவாரி இது குறித்து வழக்குப் பதிவு செய்ய உத்தரவிட்டார்.

இந்தநிலையில் இயக்குநர் மணிரத்னம் உள்பட 49 பிரபலங்கள் மீதும் தேசத்துரோகம், பொதுமக்களுக்குத் தொந்தரவு விளைவித்தல், மத உணர்வுகளைப் புண்படுத்துதல், அமைதியைக் குலைக்கும் வகையில் பேசுதல் ஆகிய பிரிவுகளின் கீழ் பீகார் பொலிஸார் நேற்று வழக்குப் பதிவு செய்தனர்.

பீகார் பொலிஸாரின் இந்த நடவடிக்கை இந்திய அளவில் பரபரப்பை ஏற்படுத்தி இருக்கிறது.

# ஹொங்கொங்கில் முகமூடி அணிய தடை!

## போராட்டக்காரர்களை அடையாளம் காணவாம்



ஹொங்கொங்,ஒக்.06

ஹொங்கொங்கில் அரசு எதிர்ப்பு போராட்டத்தை கட்டுப்படுத்தும் ஒரு நடவடிக்கையாக அங்கு முகமூடி அணியத் தடை விதிக்கப்பட்டு உள்ளது.

ஹொங்கொங்கில் கைதிகள் பரிமாற்றச் சட்டத்திருத்தப் பிரேரணைக்கு எதிர்ப்புத் தெரிவித்து கடந்த ஜூன் மாதம் ஜனநாயக ஆர்வலர்கள் போராட்டத்தில் குதித்தனர். ஹொங்கொங்கையே உலுக்கிய இந்த போராட்டத்துக்கு அடிபணிந்த அரசு கைதிகள் பரிமாற்ற சட்டத்திருத்த பிரேரணை ரத்துச் செய்யப்படுவதாக அறிவித்தது.



எனினும் போராட்டக்காரர்கள் சீனாவிடமிருந்து ஜனநாயக உரிமைகள் கோரி போராட்டத்தை விரிவுபடுத்தினர். ஆரம்பத்தில் வார இறுதி நாள்களில் மட்டும் நடந்து வந்த இந்த போராட்டம் தற்போது வாரத்தின் அனைத்து நாள்களிலும் நடந்து வருகிறது.

போராட்டத்தில் ஈடுபடும் பெரும்பாலானோர் பொலிஸார் தங்களை அடையாளம் காணாமல் இருக்கவும், கண்ணீர் புகை குண்டுகளில் இருந்து தப்பிக்கவும் முகமூடிகளை அணிந்து கொண்டே போராடுகிறார்கள்.

இந்தப் போராட்டம் தொடங்கிய நாள் முதலே பொலிஸாருக்கும், போராட்டக்காரர்களுக்கும் இடையே மோதல் வன்முறை சம்பவங்கள் நிகழ்ந்து வந்தாலும், கடந்த செவ்வாய்க் கிழமை சீன தேசிய தினத்தின் போது நடந்த போராட்டத்தில் இதுவரை இல்லாத அளவுக்குப் பெரும் வன்முறை வெடித்தது. இதில் முதல் முறையாக பொலிஸார் போராட்டக்காரர்களைக் கலைக்கத் துப்பாக்கிச்சூடு நடத்தினர். இதில் போராட்டக்காரர் ஒருவர் படுகாயம் அடைந்தார்.

இந்தச் சம்பவத்தினால் போராட்டம் மேலும் தீவிரமடைந்துள்ள நிலையில், போராட்டத்தின் வீரியத்தைக் குறைக்கும் வகையில் ஹொங்கொங்கில் முகமூடி அணிய நிர்வாக தலைவர் கேரி லாம் தடைவிதித்துள்ளார். கொலனித்துவ கால அவசர சட்டத்தைப் பயன்படுத்தி இந்தத் தடையை அவர் கொண்டு வந்துள்ளார்.

அவசரகால ஒழுங்குமுறை கட்டளை என்ற பெயரில் 1922 ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்ட இந்தச் சட்டம் கடந்த 50 ஆண்டுகளில் முதல் முறையாக தற்போது பயன்படுத்தப்பட்டு உள்ளது. இதற்கு முன்னர் பிராந்தியத்தின் வர்த்தக மையத்தில் கலவரங்களைத் தடுக்க கடந்த 1967 ஆம் ஆண்டு இந்தச் சட்டம் பயன்படுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

அரசு எதிர்ப்பாளர்களின் போராட்டம் ஹொங்கொங்கை அழித்து வருவதாலும், நிலைமை மேலும் மோசமாகி விடக் கூடாது என்பதாலும் இந்த தடை நடைமுறைப்படுத்தப்படுவதாக கேரி லாம் கூறினார். மேலும் முகமூடி தடை நேற்று (சனிக்கிழமை) முதல் நடைமுறைக்கு வருகிறது என அவர் குறிப்பிட்டார்.

முகமூடி தடை குறித்து ஹொங்கொங் பாதுகாப்பு செயலாளர் ஜான் லீ கூறு கையில், அங்கீகரிக்கப்பட்ட மற்றும் அங்கீகரிக்கப்படாத பொதுக் கூட்டங்கள், பேரணிகள், அணிவகுப்புகள், சட்டவிரோத கூட்டங்கள் மற்றும் கலவரங்களுக்கும் இந்தத் தடை பொருந்தும். முகத்தில் வண்ணம் பூசுவது உள்பட அனைத்து வகையான முக மறைப்பையும் இந்த தடை உள்ளடக்கியது எனக் கூறினார்.

அதே சமயம் முகமூடி தடையை செயல்படுத்துவது கடினமாகவும் மற்றும் மிகவும் சர்ச்சைக்குரியதாகவும் இருக்கும் என சர்வதேச நோக்கர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். அதே போல் முகமூடிகளுக்கான தடை சர்வாதிகார போக்கின் வெளிப்பாடு எனக் கருத்து தெரிவித்துள்ள போராட்டக்காரர்கள் இந்த தடையை புறக்கணிப்பதாகத் தெரிவித்துள்ளனர்.

மேலும் அவர்கள் முகமூடி அணியாமல் போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் இனிமேல் அரசாங்கத்தை மீறி முகமூடிகளை அணிய வேண்டும் என அழைப்பு விடுத்துள்ளனர்.

அதன்படி முகமூடி தடைக்கான அறிவிப்பு வெளிவந்தவுடன் நேற்று முன்தினம் ஜனநாயக ஆர்வலர்கள் முகமூடிகளை அணிந்துகொண்டு வீதிகளில் இறங்கிப் போராட்டம் நடத்தினர்.

# உக்ரைன் நாட்டில் சரக்கு விமானம் விழுந்து நொறுங்கியதில் 4 பேர் பலி



கீவ்,ஒக்.06

உக்ரைனில் சரக்கு விமானம் விழுந்து நொறுங்கிய விபத்தில் 4 பேர் பலியாகினர்.

ஸ்பெயின் நாட்டில் இருந்து உக்ரைன் நாட்டின் விமானப் படைக்குச் சொந்தமான ‘அன்டோனோவ் 12’ ரக சரக்கு விமானம் உக்ரைனின் லிவிவ் நகருக்கு புறப்பட்டு சென்றது. விமானத்தில் விமானி உள்பட 4 பேர் இருந்தனர்.

இந்த விமானம் லிவிவ் நகரில் உள்ள விமான நிலையத்தை நெருங்கியபோது, திடீரென விமானத்தின் எரிபொருள் காலியானது. இதனால் விமானி உடனடியாக விமானத்தை அவசரமாக தரையிறக்க முயற்சித்தார். ஆனால் விமானியின் கட்டுப்பாட்டை இழந்த விமானம் விமான நிலையத்தில் இருந்து ஒன்றரைக் கிலோ மீற்றருக்கு முன் உள்ள காட்டுப் பகுதியில் விழுந்து நொறுங்கியது.

இதில் விமானத்தில் இருந்த 4 பேரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். விபத்துக்கான காரணம் என்ன என்பது உடனடியாகத் தெரியவில்லை. இது குறித்து விசாரிக்கப்படுகிறது.

# பெட்டி பெட்டியாக சிங்க எலும்புகளை கடத்த முயன்றோர் வசமாக சிக்கினர்

## ஜோகன்னஸ்பர்க் விமான நிலையத்தில் சம்பவம்



கேப்டவுன்,ஒக்.06

தென்னாபிரிக்காவில் பெட்டி, பெட்டியாக விமானத்தில் கடத்த முயன்ற சிங்க எலும்புகள் சிக்கி உள்ளன.

தென்னாபிரிக்காவின் ஜோகன்னஸ்பர்க் நகர சர்வதேச விமான நிலையத்தில் இருந்து மலேசியாவுக்கு விமானம் ஒன்று புறப்பட தயாராக இருந்தது. இந்த விமானத்தின் சரக்குப் பிரிவில் கடத்தல் பொருள்கள் இருக்கின்றன என வந்த தகவலின் பேரில் சுற்றுச்சூழல் அமைச்சக அதிகாரிகள் உடனடியாக சோதனை நடத்தினர்.

அப்போது அலுமினியத் தாளில் மூடப்பட்டிருந்த 34 பெட்டிகளில் 342 கிலோ எடை கொண்ட சிங்க எலும்புகள் இருக்கின்றமையைக் கண்டுபிடித்த அதிகாரிகள் அவற்றைப் பறிமுதல் செய்தனர். மேலும் இந்தக் கடத்தல் சம்பவம் தொடர்பாக ஸிம்பாப்வே நாட்டைச் சேர்ந்த இருவர் உள்பட 3 பேர் கைது செய்யப்பட்டனர்.

இது குறித்து தென்னாபிரிக்கா அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், பெரும்பாலும் ஆசியாவில் மருத்துவ உபயோகத்திற்கும், ஆபரணத் தயாரிப்புகளுக்கும் இந்த சிங்க எலும்புகள் பயன்படுத்தப்படுகின்றன.

சிங்கங்களின் எலும்புகளை ஏற்றுமதி செய்வது சட்டபூர்வமானது என்றாலும், அவற்றை வெளியே அனுப்ப சுற்றுச்சூழல் அமைச்சகத்தின் சிறப்பு அனுமதிபெறப்பட வேண்டும். இதில் அதற்கான விதிமுறைகள் பின்பற்றப்படவில்லை. இது தொடர்பாகக் கைது செய்யப்பட்டவர்களிடம் விசாரணை நடந்து வருகிறது என தெரிவிக்கப்பட்டு உள்ளது.



# சமல் ராஜபக்ஷ கட்டுப்பணம் செலுத்தியது மாற்று ஏற்பாடே!

## கூறுகின்றார் மஹிந்த ராஜபக்ஷ

கொழும்பு, ஒக். 06

சமல் ராஜபக்ஷ மாற்று ஏற்பாடாகத்தான் தேர்தல் செயலகத்தில் கட்டுப்பணம் செலுத்தியிருந்தார் என பொதுஜன பெரமுனவின் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான தீர்ப்பு பாதகமாக அமைந்தால் மாற்று ஏற்பாடாக சமல் ராஜபக்ஷவைப் போட்டியில் நிறுத்தத் தீர்மானிக்கப்பட்டது என்றும் அவர் கூறினார்.

எனினும், கோட்டாபய ராஜபக்ஷவுக்குச் சாதகமாகத் தீர்ப்பு வெளியானதை அடுத்து, சமல் ராஜபக்ஷ போட்டியிடவேண்டிய அவசியம் இல்லை என்றும், அவர் வேட்புமனுவைத் தாக்கல் செய்யமாட்டார் என்றும் மஹிந்த கூறினார்.

அதேவேளை, கோட்டாபய போட்டியிட முடியாத நிலை ஏற்பட்டால் மாற்று ஏற்பாடாகவே



சமல் ராஜபக்ஷ கட்டுப்பணம் செலுத்தினார் என்று விமல் வீரவன்ஸவும் உறுதி செய்துள்ளார். (ஐ)

# சர்வதேச விமான நிலையம் மட்டக்களப்பிலும் அமையும்

## ரணில் நேரில் கலந்தாராய்வு

மட்டக்களப்பு, ஒக். 06



கிழக்கு மாகாண சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்யம் நோக்குடன் பிரதமர் தலைமையிலானகுழுநேற்று மட்டக்களப்புக்கு விஜயம் செய்தது.

இந்த விஜயத்தின் முக்கிய விடயமாக மட்டக்களப்பு விமான நிலையத்தை சர்வதேச விமான நிலையமாக தரமுயர்த்தல் தொடர்பான உயர் மட்டக் கலந்துரையாடல் புது நகரிலுள்ள விமான நிலையத்தில் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடல் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய உதவி நிறைவேற்றுப் பணிப்பாளர் பிரியந்த காரியபெரும தலைமையில் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் மாவட்ட அரச அதிபர் மாணிக்கம் உதயகுமார், பிரதமர் அலுவலக உயர்அதிகாரிகள், பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலைய உயர் அதிகாரிகள், மட்டக்களப்பு விமானநிலைய உயர்அதிகாரிகள் மற்றும் மாவட்ட சுற்றுலாத்துறை விடுதி முகாமையாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

மட்டக்களப்பிலிருந்து நேரடியாக இந்திய சுற்றுலாத் தலங்களைத் தரிசிக்கும் நோக்குடன் மட்டக்களப்பு, பலாலி மற்றும் மத்தள விமான நிலையங்கள் ஊடாகவும் எதிர்வரும் காலங்களில் சர்வதேச சேவைகளை முன்னெடுப்பது தொடர்பில் இதன்போது விமான நிலைய அதிகாரிகளுடன் கலந்துரையாடப்பட்டது.

மேலும் மட்டக்களப்பு விமான நிலைய கட்டுமானப் பணிகளை ஆரம்பிப்பது தொடர்பாகவும் பிரதமர் தேவையான பணிப்புரைகளை விடுத்தார்.

இதேவேளை, விமான நிலையத்தின் ஓடு பாதைகளை பார்வையிட்டா பிரதமர், மாவட்டத்தின் சுற்றுலாத் துறையையும் பொருளாதார அபிவிருத்தியையும் உயர்த்தும் நோக்குடன் பல பணிகள் முன்னெடுக்கப்படவுள் ளன எனத் தெரிவித்தார். (ஐ)

# கோட்டாவை ஓரம் கட்டும் முயற்சிகள் முழுத் தோல்வி

## ஜி.எல்.பீரிஸ் தெரிவிப்பு



கொழும்பு, ஒக். 06

முன்னாள் பாதுகாப்புச் செயலாளரும் பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளருமான கோட்டாபய ராஜபக்ஷவை அரசியலில் இருந்து நீக்குவதற்கு நீதித்துறையைப் பயன்படுத்தி முன்னெடுக்கப்பட்ட முயற்சிகள் தோல்வியடைந்துள்ளன என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தவிசாளர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

அத்தோடு நீதிமன்றம் சுயாதீனமாகச் செயற்பட்டமைக்குத் தலைவணங்குகின்றோம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

கோட்டாபயவின் இரட்டைப் பிரஜாவுரிமைச் சான்றிதழை ஆட்சேபனைக்கு உட்படுத்தித் தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனு மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் நீதிபதி யசந்த கோதாகொட, அர்ஜுன ஒபேசேகர, மற்றும் மஹிந்த சமயவர்தன ஆகிய மூவரடங்கிய நீதிபதிகள் குழாம் முன்னிலையில் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது மூன்று நாள்களாகத் தொடர்ந்து இடம்பெற்று வந்த இந்த வழக்கை மூவரடங்கிய நீதிபதிகள் குழாம் தள்ளுபடி செய்தது.

இதனையடுத்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் கோட்டபாய போட்டியிடுவதில் பெரும் சிக்கலை ஏற்படுத்தியிருந்த இந்த வழக்கு நிராகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து அவர் தேர்தலில் போட்டியிட முடியும் என்ற நிலையிலேயே, பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் இந்த கருத்தை முன்வைத்துள்ளார். (ஐ)

# வேட்புமனுக்கள் ஏற்கப்படும் நாளில் அதிதீவிர பாதுகாப்பு

கொழும்பு, ஒக். 06

ஜனாதிபதி தேர்தலுக்கான வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் 7ஆம் திகதி அன்று தேர்தல் ஆணைக்குழு அலுவலகப் பகுதியில் கடும் பாதுகாப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக சுமார் 1,700 பொலிஸார் பணியில் ஈடுபடுத்தப்படுவார்கள் என பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பொலிஸ் அத்தியட்சகருமான ருவான் குணசேகர தெரிவித்துள்ளார்.

தேர்தல் செயலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்தத் தினத்தில் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் கடமையில் ஈடுபடுத்தப்படுவார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

வேட்புமனு தாக்கல் செய்யும் தினத்தில் ஊர்வலம் முற்றாகத் தடை செய்யப்பட்டிருப்பதாகவும், வேட்புமனுக்களைத் தாக்கல் செய்ய வரும் வேட்பாளர்களின் ஆதரவாளர்களுக்காக தனியான இடம் ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். இதேவேளை, பிரதிப் பொலிஸ்மா அதிபரின் தலைமையில் பொலிஸாரைக் கொண்ட குழுவொன்று தேர்தல் அலுவலகத்துடன் ஒன்றிணைக்கப்பட்டுள்ளது.

இதற்கு அமைவாக இதன் பிரதிப் பொலிஸ்மா அதிபர் சரத் பீரிஸ், பொலிஸ் அத்தியட்சகர் ஒஷான் ஏவவித்தாரண ஆகியோர் குழுவில் பணியாற்றுகின்றனர். இந்த பிரிவுக்கு கிடைத்த முறைப்பாடுகள் தொடர்பாக விசாரணைகள் நடத்தப்பட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் தெரிவித்தார். (ஐ)

# கோட்டாவுக்கு ஆதரவாக வியாழேந்திரன் பிரசாரம்

மட்டக்களப்பு, ஒக். 06

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் வியாழேந்திரன் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஆதரவாக தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடுவதற்குத் தீர்மானித்துள்ளார்.

வியாழேந்திரன் உள்ளிட்ட 14 கட்சிகள் இணைந்து நேற்று முன்தினம் கொழும்பு பொதுஜன பெரமுன கட்சியின் தலைமை காரியாலயத்தில் கலந்துரையாடல் ஒன்றை நடத்தினர்.

இந்தச் சந்திப்பில் கிழக்கு மாகாணம் சார்பாக முன்னாள் பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா), தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் வியாழேந்திரன், மட்டக்களப்பு மாவட்ட பொதுஜன பெரமுன கட்சியின் அமைப்பாளர் சந்திரகுமார் உள்ளிட்டோர் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது, நடைபெறப் போகும் ஜனாதிபதி தேர்தலில் பொதுஜன பெரமுன கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டபயவை ஆதரிப்பதற்கு 14 கட்சிகளும் தீர்மானித்துள்ளன என மட்டக்களப்பு மாவட்ட பொதுஜன பெரமுன கட்சியின் அமைப்பாளர் பா.சந்திரகுமார் தெரிவித்தார்.

# வவுனியா வடக்கில் முதன் முறையாக நீரேந்துப் பகுதிகளில் மருதமர நடுகை




வவுனியா, ஒக். 06

வனபாதுகாப்பு மற்றும் சுற்றாடல் அமைச்சினால் ஒக்ரோபர் மாதம் மேற்கொள்ளப்படும் வன ரோபா நிகழ்வானது வவுனியா மாவட்ட நெடுங்கேணி வட்டார வன அலுவலகத்தினால் இந்த வருடம் நெடுங்கேணிப் பிரதேசத்தில் அமைந்துள்ள கமநல சேவைகள் திணைக்களத்திற்குட்பட்ட மருதங்குளத்தில் நீரேந்து பிரதேசத்தில் நேற்று முன்தினம் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது மருத மரக் கன்றுகள் நடப்பட்டன.

இந்நிகழ்வில் விருந்தினர்களாக நெடுங்கேணி உதவி பிரதேச செயலாளர், வவுனியா மாவட்ட கமநல சேவைகள் பிரதி பணிப்பாளர், நெடுங்கேணி வட்டார வன அதிகாரி, வவுனியா வடக்கு பிரதேச சபை தவிசாளர், வவுனியா வடக்கு பிரதேச சபை செயலாளர், நெடுங்கேணி கிராம சேவையாளர், நெடுங்கேணி மகா வித்தியாலய அதிபர், மாணவர்கள், கமநல சேவைகள் திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பொலிஸ் உத்தியோகத்தர்கள் கலந்து சிறப்பித்தார்கள். (ஐ)





# போரில் தற்காலிகமாக வீழ்த்தப்பட்டுள்ளோம் நிரந்தரமாக அல்ல என்கிறார் இயக்குநர் அமீர்

முல்லைத்தீவு, ஒக். 06

இறுதிப் போரின்போது எதிரிகளின் சூழ்ச்சியினால் தற்காலிகமாக வீழ்த்தப்பட்டுள்ளோமென்றும் நிரந்தர மாக வீழ்த்தப்படவில்லையென திரைப்பட இயக்குநரும் ஈழ ஆதரவாளருமான அமீர் தெரிவித்துள்ளார்.

அத்தோடு மத நம்பிக்கையுடையவர்கள் கோயிலுக் குள் நுழைகையில் என்ன பரவசம் இருக்குமோ அதே மனநிலைதான் இம்மண்ணில் காலடி பதிக்கையில் ஏற்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

லண்டனில் உள்ள ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயத் தின் நிதிப் பங்களிப்புடன் முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் பிரதேச செயலாள ர் பிரிவில் வசந்தநகர் பகுதியில் மாதி ரிப் பண்ணை திறந்து வைக்கப்பட்டது.

கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற இந்நிகழ்வில் தென்னிந்திய திரையுலகின் இயக்குநர் இமயம் பாரதி ராஜா, தென்னிந்திய திரைப்பட இயக்குநர் அமீர், நாடாளு மன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, சி.சிறி தரன், லண்டன் கற்பக விநாயகர் ஆலய ஸ்தாபகர் கோபாலகிருஷ்ணன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

அத்துடன், அந்தப்பண்ணையின் பெயர்ப்பலகையை இயக்குநர் பாரதிராசா உள்ளிட்ட அதிதிகள் திறந்து வைத்தமையைத் தொடர்ந்து, பண்ணையை லண்டன் கற்பக விநாயகர் ஆலய ஸ்தாபகர் கோபாலகிருஷ்ணன் நாடா வெட்டி திறந்து வைத்தார்.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதா ரத்தை உயர்த்தும் நோக்கில் இந்த மாதிரிப்பண்ணை அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமீர் மேற்கண்டவாறு கூறினார்.


அவர் மேலும் தெரிவிக்கையில் –

2007ஆம் ஆண்டு இம்மண்ணிற்கு வருவதற்கு நான் ஆயத்தமானேன். இதன்போது சீமானிடம் சென்று இலங்கைக்குச் சென்று போராட்டங்களைப் பார்க்க வேண்டுமெனக் கோரினேன். அந்த போராட்டங்களை உலக அரங்கிற்குப் பதிவு செய்ய வேண்டும் எனத் தெரி வித்தேன்.

இதன்போது அவர் என்னிடம் சிறிது நாட்கள் பொறு மையுடன் இருக்குமாறும் நாம் அங்கு சென்று ஈழப் புலிகளின் திரைப்படத்தை எடுப்போம் எனவும் தெரிவித் தார்.

இதனையடுத்து நான் மிகவும் ஆவலாக இருந்தேன். எனினும் எதிரிகளின் சூழ்ச்சியினால் தற்காலிகமாக வீழ்த்தப்பட்டுள்ளோம் என்றே நான் நினைக்கின்றேன். நிரந்தரமாக வீழ்த்தப்படவில்லை – என்றார். (ஐ)

## 20 அடி பள்ளத்தில் பாய்ந்த கார்!



கொழும்பு, ஒக். 06

நோர்வுட் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஹற் றன் ஒல்டன் பிரதான வீதியின் நோர்வுட் மேற் பிரிவு பகுதியில் வீதியை விட்டு விலகிய கார் ஒன்று 20 அடி பள்ளத்தில் பாய்ந்தது.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் இடம்பெற்றதாகப் பொலி ஸார் தெரிவித்தனர்.

ஹற்றனில் இருந்து மஸ்கெலியா சாமி மலைப் பகுதியை நோக்கி பயணித்த இந்தக் காரில் சென்ற எவருக்கும் பாதிப்பில்லையென பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர். (ஐ)

# கோட்டாவுக்கு எதிராக வழக்கு தொடரும் அவசியம் கிடையாது

## ஹரின் பெர்ணான்டோ தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 06

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிராக வழக்கு தொடரவேண்டிய அவசியம் ஐக்கிய தேசியக் கட்சிக்கு கிடையாதென அமைச்சர் ஹரின் பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந் திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் வெற்றியடைவ தற்கான வேலைத்திட்டங்களை தற்போது நாம் முன் னெடுத்துச் செல்கின்றோம்.

அந்தவகையில் பொதுஜன பெரமுனவின் ஜனாதி பதி வேட்பாளராக கோட்டாபய, களமிறங்கி இருப்பது குறித்து நாம் அஞ்சமடையவில்லை. அத்துடன் எமது கட்சிக்கு அவர் பலமான போட்டியாளர் கிடையாது.

இதேவேளை கோட்டாவுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் வழக்குக்கும் ஐக்கிய தேசியக்



கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் எந்த வித தொடர்பும் இல்லை.

அவருக்கு எதிராக வழக்கு தொடருவதற்கு எந்த தொரு தேவைப்பாடும் எங்களுக்கு கிடையாது – என் றார். (ஐ)

## மர்மநபர்கள் தாக்குதலில் இரண்டு பேர் படுகாயம்!

யாழ்ப்பாணம், ஒக். 06

தென்மராட்சி, வெள்ளாம்போக்கட்டிப் பகுதி யில் நேற்றுமுன்தினம் இரவு 9.50 மணியளவில் இனம்தெரியாத நபர்கள் மேற்கொண்ட தாக்குத லில் இருவர் காயமடைந்துள்ளனர்.

வீதியால் மோட்டார் சைக்கிள் ஒன்றில் பய ணித்துக் கொண்டிருந்த மூவரை இடைமறித்து மறைந்திருந்த இனம்தெரியாத நபர்கள் துரத்தி த் துரத்தி இரும்புக் கம்பி மற்றும் கத்தியால் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

சம்பவத்தில் படுகாயமடைந்த ஒருவர் சாவ கச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் வைத் தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். (ஐ)

# ஆப்பிழுத்த குரங்காகிவிட்டாராம் ரிஷாத்!



கல்முனை, ஒக். 06

அமைச்சர் ரிசாட் பதியுதீனின் நிலை ஆப்பிழுத்த குரங்கின் நிலையாகி விட்டது என முன்னாள் உயர்கல்வி பிரதியமைச்சர் மயோன் முஸ்தபா தெரிவித்தார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாகவும் சம கால விடயங்கள் தொடர்பாகவும் கடந்த வெள்ளிக் கிழமை மாலை 5 மணியளவில் முன்னாள் உயர் கல்வி பிரதியமைச்சர் எம்.எம்.மயோன் முஸ்தபாவி னால் ஒழுங்குபடுத்தப்பட்ட ஊடகவியலாளர் மாநாடும் மக்கள் சந்திப்பும் கல்முனை வரவேற்பு மண்டபம் ஒன்றில் நடைபெற்றபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

2009 யுத்த வெற்றியின் பிற்பாடு வடக்கிலும் புத்தளம் மற்றும் வில்பத்து போன்ற இடங்களில் மீள் குடியேறிய மக்களுக்குப் புதிய கிராமங்களை உரு வாக்கி மீள்குடியேற வைத்தவர் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. எவர் ஐக்கிய தேசிய கட்சிக்கு ஆத ரவை அளித்திருந்தாலும் குறிப்பாக அமைச்சர் ரிஷாத் பதியுதீன் ஆதரவளித்திருக்கக்கூடாது என்பதுடன் அவரது உள்ளம் முழுமையாக பொதுஜன பெரமு னவை ஆதரித்தாலும் அவர் நடைமுறையில் ஐக்கிய தேசியக் கட்சியியை ஆதரிக்க வேண்டிய நிலையில் உள்ளார்.

இவரது இந்த நிலையானது ஆப்பிழுத்த குரங்கின் நிலை போல் ஆகிவிட்டது. அத்துடன் 2000 ஆண்டில் ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸை அமைச்சர் ரவூப் ஹக்கீம் பொறுப்பேற்றதன் பின்னர் முஸ்லீம் மக்க ளுக்குச் செய்தது என்ன? இந்த தேசத்திற்கும் செய் தது எதுவும் கிடையாது. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கிழக்கில் முஸ்லிம் மக்களை ஒருவித மயக்க நிலை யில் வைத்துள்ளது. அந்த மயக்க நிலையினால் தான் இன்றும் அந்தக் கட்சிக்கு மக்கள் வாக்களிக்கின்றனர். ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரம சிங்க ஜனாதிபதி வேட்பாளராக சஜித் பிரேமதாஸவை தகுதியற்றவர் என்ற குழப்பத்தின் மத்தியில் ஒருவித அழுத்தத்திற்கு ஆளாகிய பிற்பாடே அவரை ஜனாதி பதி வேட்பாளராக நியமித்துள்ளார். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் போன்ற முஸ்லிம் பங்காளி கட்சிகளின் ஒப்பந்தங்கள் ஏற்கனவே ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுடன் இரகசி யமாக ஒப்பந்தங்களாக நடந்தேறி விட்டன.

இந்த ஒப்பந்தமானது முஸ்லிம் மக்களுக்கு தீர்வான ஒப்பந்தமா அல்லது தனி நபருக்கு இலாபமான ஒப் பந்தமா என முஸ்லீம் மக்கள் நன்கு அறிவர். ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீமை பொறுத்த மட்டில் மத கருத்துக்களைக் கூறிச் சாணக்கியம் பேசி மக்களை ஏமாற்றும் பழைய புராணமாகவே அவரது அரசியல் காணப்படுகிறது – என்றார். (ஐ)

# மறவன்புலோ காற்றாலைகள்: மறைக்கப்படும் உண்மைகள்

**மறவன்புலோ காற்றாலை சம்பந்தமாக மக்களுக்கு எழுந்துள்ள ஐயங்களும் அவற்றுக்கான விஞ்ஞான ரீதி யான விளக்கங்களும் இங்கு தரப்படுகின்றன.**

பூமியில் நம்மிடம் இருக்கும் வரம்பற்ற ஆற்றல் மூலங்களில் ஒன்று காற்று. காற்றின் ஆற்றலைப் பயன்படுத்தி மின் சாரத்தை பெறுவதற்குப் பாரிய காற்றாலைகளை நாங்கள் உருவாக்கின்றோம். இந்த காற்றாலை மூலமான மின் உற்பத்தியானது சூழலுக்கு பாதிப்பு மிகக் குறைந்தது என்பதனால் அனைத்து நாடுகளும் அதனை ஊக்குவித்துப் பயன் அடைகின்றனர்.

அண்மைய காலங்களில் மறவன்புலோ பிரதேசத்தைச் சேர்ந்த சிலர் இப்பிரதேசத்தில் உருவாகி வரும் மின்காற்றாலைக்கு எதிராக சிறுபிள்ளைத்தனமாகத் தமது எதிர்ப்புக்களை வெளியிட்டு வருகின்றனர். இவர்களின் பின் னணியில் வேறு சில சக்திகள் இருந்து நாட்டிற்கு நன்மை பயக்கும் இத்தேசியத் திட்டத்தை எதிர்த்து தாமதமாக்குகின்றமை மறைமுகமாக இலங்கை மக்களுக்கு பெரும் நஷ்டத்தை ஏற்படுத்தி வரு கின்றது.

மேலும் ஆளுநர் உடன் 24.09.2019 இல் நடைபெற்ற காற்றாலை சம்பந்தமான கூட்டத்தில் வடபிராந்திய மின்சார சபையின் முகாமையாளர் குணதிலக மின்சாரசபைக்கு, இத்திட்டதின் தாமதத்தால் ரூபா 55 கோடி நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக சுட்டிக் காட்டியமை குறிப் பிடத்தக்கது. இத்திட்டத்திற்காக இவர்கள் கூறும் நகைப்புக்குரிய காரணங்கள் எந்தவித அடிப்படையும் இல்லாதவை. அதனை நிருபிக்கும் வகையிலும், ஏனைய உண்மைத்தன்மை உள்ள சாதா ரண விடயங்களுக்கான தீர்வுகளையும் இக் கட்டுரை விவரிக்கின்றது.

### மழைவீழ்ச்சி மீதான தாக்கம்

சாதாரண விசிறியானது வெளியில் இருந்து மின்சக்தியை கொடுக்கும்போது செயற்கையான காற்றோடத்தை ஏற்படுத் துகிறது.எனினும் மின் உற்பத்தியில் உள்ள காற்றாலையானது இயற்கையில் வீசும் காற்றின் சக்தியை பெற்று சுழல்வதனால் இது இயற்கை யாக வீசும் காற்று அழுத்தத்தில் மேலதிகமாக எந்த விதமான தாக்கத்தையும் ஏற்படுத்துவதில் லை.

மேலும் மழைவீழ்ச்சிக்குக் காரணமான கருமுகில்கள் மிக உயரத்திலேயே நகர்கின்றன. ஆகையினால் மின்காற்றாலையின் காரண மாக கருமுகில்களின் ஓட்டத்தில் எவ்வித பாதிப்பும் ஏற்படாது. அதனால் மழைவீழ்ச்சியில், எந்த விதமான மாற்றமும் ஏற்பட விஞ்ஞான ரீதியாகக் காரணங்கள் எதுவும் இல்லை.

இதை வானிலை ஆராய்ச்சி நிலையங்களின் புள்ளி விவரங்களும் உறுதிப்படுத்துகின்றன. அதிக காற்றாலை உள்ள பிரதேசங்களில், காற்றாலை அமைக்க முன்னர் உள்ள மழை வீழ்ச்சியின் அளவையும் காற்றாலை அமைக் கப்பட்ட பின்னர் உள்ள மழை வீழ்ச்சியின் அள வையும் ஒப்பிட்டபோது எந்த விதமான மாற்றமும் ஏற்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டுள் ளது.

### நிலக்கீழ் நீரின் உவர்தன்மை

காற்றாலையானது பொதுவாக இலங்கை யில் கடற்கரை பிரதேசங்களிலேயே அமைக்கப் படுகிறது. இவற்றில் சில இடங்களில் இயற்கை யாகவே நிலத்தடி நீர் உவராக காணப்படுகிறது. உதாரணமாக மறவன்புலோவில் காணப்படும் நிலக்கீழ் நீரானது பல இடங்களில் உவராகவே காணப்படுவது குறிப்பிடத்தக்கது. மேலும் காற்றாலை கோபுரத்திற்கு அடித்தளம் இடும் பொழுது மிகக்குறுகிய நேரத்தினுள் கொங்கிறீட் இனால் நிரப்பப்படுகிறது. ஆகையால் இது நிலக் கீழ் நீரோட் டத்தை ஏற்படுத்தாததன் காரணத்தால் ஏற்கனவே இருக்கும் நிலக்கீழ் நீரானது இதன் காரணமாக மாற்றமடையது.

### பயிர்ச்செய்கை

நீர் உவராகினால் மட்டுமே பல பயிர்ச் செய் கைகள் செய்ய முடியாமல் போகலாம். காற்றா லையின் நிமித்தம் நிலத்தடி நீர் பாதிக்கப்படாத காரணத் தினால் விவசாய நடவடிக்கைகள் பாதிக் கப்பட முடியாது. கூடியளவு காற்றாலைத் தளங்கள் உள்ள புத்தள மாவட்டத்தில் அந்தக் காற்றாலைத் தளங்களிலில் வெங்காயம், பீட் ருட், புகையிலை, மிளகாய் மற்றும் தக்காளி போன்ற பயிர்செய்கை கள் வெற்றிகரமாக இடம் பெற்று வருகின்றமை யைக் கண்கூடாகப் பார்க்கலாம்



### சத்தம்

காற்றாலை இயங்கும் பொழுது விசிறி காற்றை வெட்டுவதனாலும் மின்உற்பத்தி இயந்திரத்தில் உள்ள கியார் பெட்டி போன்ற இயங்கும் இயந் திரவியல் உபகரணம் காரணமாகவும் இரு வகை யான சத்தம் உருவாகிறது. இவற்றில் முதலாவது சத்தமானது மிக குறைந்த அளவி லும் இரண்டாம் வகை சத்தமானது 90 டெஸிபிள் (dB) அளவில் உருவாகின் றது. இச்சத்தமானது தரையில் 100 மீற்றர் தூரத்திற்கு வரும் பொழுது 40dB - 50dB வரை குறைந்துவிடும். இங்கு 50dB என்பது ஒரு சாதாரண வகுப்பறையின் சத்தத்துக்குச் சம னானது.

மேலும் இலங்கை அரசாங்கத்தின் மத்திய சூழல் சபையின் அனுமதிக் கப்பட்ட கூடிய சத்தமானது 65dB (பகல் வேளை), 55dB (இரவு வேளை) ஆகும். மேலும் கடற்கரை பிரதேசத்தில் 100 மீற்றருக்கு அப்பால் இயல்பாகவே உள்ள காற்றோடத்தின் சத்தமானது சாதாரணமாக காற் றாலையில் இருந்து வரும் சத்தத்திலும் பார்க்க கூடுதலா கவே இருக்கும்.

அகஒலி(Infra sound wave) என்பது பொதுவாக மனிதகேள் திறனின் குறைந்த மீடிறனுக் குறைவாக உள்ள ஒலி அலைகள் ஆகும்.

| அகஒலி(infra sound wave)/ (மீடிறன்) | 100HZ | 50HZ | 40HZ | 25HZ | 20HZ | 10HZ |
|---|---|---|---|---|---|---|
| உற்பத்தியாகும்ஒலியின்வலிமை | 27dB | 44dB | 51dB | 69dB | 79dB | 97dB |
| 100m தரையில்ஒலியின்வலிமை | -26dB | -9dB | -2dB | 16dB | 26dB | 44dB |

மேலுள்ள அட்டவணை சாதாரண ஒரு காற்றாலையினால் பிறப்பிக்கப்படும் இடத்தில் ஏற்படும் அக ஒலியின் அளவைக் காட்டுகின்றது. இவை கேள்திறன் மிக்க ஒலிகளின் அளவை விடக் குறைவாகக் காணப்படுவதனால் தரையில் 100 மீற்றருக்கு அப்பால் உள்ள பிரதேசங்களில் இதன்சக்தி இன்னும்வலிமை இழந்து போவதனால் இக்காற்றாலைகள் மனித சுகாதாரத்திற்கு எந்த விதப்பாதிப்பு ஏற்படுத்தமாட்டாத. இந்த கருத்தானது அமெரிக்கக் காற்றாலை ஆற்றல் சங்கம் மற்றும் கனடிய காற்றாலை ஆற்றல் சங்கம் ஆகியவற் றால் நடத்தப்பட்ட ஆய்வு அறிக்கையில் முடிவா கக் கூறப்பட்டது.

மேலும் காற்றாலை மூலம் ஏற்படுத்தும் புற ஒலி (Ultra sound wave) அலைகளாலும் பாதிப்பு ஏற்படாது என Loughborough பல்கலைக்கழகத் தினாக் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சி அறிக் கையில் (2011)கூறப்பட்டுள்ளது.

### உண்மையான பாதிப்புகளும் அவற்றுக்கான தீர்வுத் திட்டங்களும்

இத்திட்டத்தை எதிர்த்து ஆளுநரிடம் மனு கொடுத்தவர்கள், அந்த மனுவில், திட்டத்தை எதிர்ப்பதற்கான காரணங்களாக பனை மரங் கள், தாழை மரங்கள், கால்நடைக்கான புற் தரைகள் அகற்றியமை, இராணுவத்தினால் அமைக்கப்பட்ட மண் அணைகளை சமப்படுத்தி யமை போன்றவற்றைத் தமக்கு இத்திட்டதால் ஏற்பட்ட பாதிப்புக்களாகக் குறிப்பிட்டுள்ளனர்.

எனினும் இவர்களின் பாதிப்பின் அளவு இத் திட்டத்தினால் எமக்கு ஏற்படும் நன்மையின் அளவில் நூற்றில் ஒரு பங்கு கூட இல்லை என் பது தெளிவான உண்மை. எவ் வாறாயினும் இவர்களால் குறிப்பிடப்பட்ட அனத்துப் பாதிப்புக் களுக்குமான தீர்வு கீழ் குறிப்பிட்டவாறு இலகு வாக வழங்கப்படக் கூடியது என்பதனால் இந்த போராட்டம் அர்த்தம் அற்றதாகி விடுகிறது.

காற்றாலைச் சத்தம், காற்றாலைக் கோபுரம் (90மீ. உயரமான)அல்லது விசிறி உடைந்து விழுவதனால் ஏற்படக் கூடிய பாதிப்பு போன்றன 100மீ. - 130மீ. வரையில் மட்டுமே ஏற்படும். ஆகையால் சிலர் கூறுவது போல் 800மீ. உள்ள பிரதேசத்தினுள் குடியிருப்புக்கள் இருக்கக் கூடாது என்பது முற்றிலும் உண் மைக்கு புறம்பான கருத்து என்பது வெளிப்படையானது.

இலங்கையில் காற்றா லைகள் அதிகம் உள்ள இடமான புத்தளம் மாவட்டத்தில் அநேகமான காற் றாலை உள்ள காணிகளின் அண் மையில் (100மீ.) மக்கள் குடியேறி இருப்பது குறிப்பிடத்தக்கது.

இப்பிரதேசத்தில் காணப்படும் தாவரங்களான பனை, தாழை (படரும் தாவரம்) ஆகியவற்றில் இத்திட்டத்திற்காக 5 தொகுதி தாழை மரங்களும் 2 பனை மரங்களும் மட்டுமே இதுவரையில் அகற்றப்பட் டுள்ளன. இதற்கான பதிலீட்டு நடவடிக்கையாக அழிக்கப்பட்ட தாவரங்களின் எண்ணிக்கைக்கு இரு மடங்கு அல்லது அதிகமான தாவரங்களை இப்பிரதேசத்தில் நாட்டுவதற்கான திட்டம் பிரதேச செயலரிடம் ஏற்கனவே கையளிக்கப்பட்டு பிரதேச செயலாளரினால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.



மேலும் மறவன்புலோ பிரதேசமானது உவர் நீர் மணல் அமைப்பை கொண்டுள்ளதனால் குறிப்பிடும்படியாக கால்நடைக்கான புற்றரைகள் காணப்படவில்லை.

மேலும் இத்திட்ட நடவடிக்கையின் போது கனரகவாகனங்களின் பாவனையால் பாதிக் கப்பட்ட வீதியானது ஆரம்பத்தில் இடப்பட்ட வீதி யின் தன்மைக்கு சமமான தரத்துடன் மீள அமைப்பதற்கான திட்டம் பிரதேச சபையிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

(14 ஆம் பக்கம் பார்க்க....)

**ஸ்ரீதரன் சிவலிங்கம்**

# நீதித் தராசில் கூட்டமைப்பு



கம்பவாரிதி
இலங்கை ஜெயராஜ்

(சென்றவாரத்தொடர்ச்சி)

விக்னேஸ்வரன் பெற்ற அரசியல் பலம், கூட்டமைப்பினரை வீழ்த்த நினைத்திருந்த எதிரணியினருக்கும், கூட்டமைப்போடு உடனிருந்து இழுக்குப் பட்ட மாற்றணியினருக்கும் வரமாய்த் தோன்ற, முதலமைச்சரைப் பயன்படுத்தித் தத்தம் அணிகளை வளர்க்க அக்கட்சிகள் திட்டமிடத் தொடங்கின.


அத்திட்டத்தின் வெளிப்பாடாய் திடீரென ஒரு நாள் வெடித்த 'தமிழ்மக்கள்பேரவை'க் குண்டு, சம்பந்தன், சுமந்திரன் ஆகியோரையும் தமிழரசுக் கட்சியையும் மட்டுமன்றி, தமிழ்ச்சமூகம் முழுவதையும் கூட அதிரவைத்தது உண்மை. அதுபற்றி அடுத்தவாரம் சொல்கிறேன்.

உலகம் வியக்கும்படியாய் அந்த விடயம் ரகசியமாய் அரங்கேறியது. குறிப்பிட்ட சில பத்திரிகையாளர்கள், வேறு சில வைத்தியகலாநிதிகள், இன்னும் சில அரசியல் அணிசார்ந்தவர்கள், மதத் தலைவர்கள் எனப் பலரையும் ஒன்றிணைத்து, எந்தவித முன்னறிவிப்பும் இன்றி, எவருக்கும் தெரியாமல், தமிழ்மக்கள் பேரவையின் முதற் கூட்டம், யாழ் நூலகத்தில் பூட்டிய அறை ஒன்றினுள் திடீரென நடத்தப்பட்டது.

ஆரம்பத்தில் ஊடகக்காரர்களுக்குக் கூட, இந்த விடயம் தெரிந்திருக்கவில்லை. அந்த அளவுக்கு ரகசியம் பேணப்பட்டது. கூட்டமைப்புக்கு எதிராய் சிறுசிறு புள்ளிகளாய் விலகிக் கிடந்த பலரையும், ஒன்றிணைத்து போட்டப்பட்ட கோலமாகவே பேரவை அமைந்துபோயிற்று.

சுரேஷ் பிறேமச்சந்திரன், சித்தார்த்தன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோரோடு, தமிழ ரசுக்கட்சியின் உபதலைவர்களில் ஒருவரான பேராசியர் சிற்றம்பலம் மற்றும் அருந்தவபாலன் போன்ற, தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த அதிருப்தியாளர் ஒரு சிலரும் கூட இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

முதலமைச்சர் விக்னேஸ்வரன் அவர்கள் இக்கூட்டத்தில் முக்கியப்படுத்தப்பட்டார். மிக ரகசியமாக நடத்தப்பட்ட இக்கூட்டத்தில், இப்பேரவையின் இணைத் தலைவர்களில்



ஒருவராக முதலமைச்சர் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இது ஓர் அரசியல் சார்ந்த அமைப்பன்று என்றும்,மக்கள் இயக்கமே என்றும் சொல்லப்பட்ட போதிலும்,அதில் பெரிய அளவில் உண்மை இருக்கவில்லை.

பேரவையின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்,அங்கு முதலமைச்சர் ஆற்றிய உரையில், மறைமுகமாக அவர் கூட்டமைப்பைத் தாக்கினார். கடைசிவரை இக்கூட்டத்தைக் கூட்டிய அமைப்பாளர்கள் யார் என்ற ரகசியம், வெளிப்படவேயில்லை.

இவ் அமைப்பின் செயற்பாடுகள் பற்றியும், அதன் நேர்மைத்தன்மை பற்றியும் பின்னர் தனியே ஆராய்வோம்.

பேரவையின் ஆரம்பத்தோடு ஈழத்தமிழர் அரசியல் உலகில்,முதலமைச்சர் முக்கியப்படுத்தப்பட்டார். எதிர்க்க எவருமின்றி தனித்த தகுதி பெற்றிருந்த கூட்டமைப்பினருக்கு எதிரான, ஓரளவு மக்கள் பலம் பெற்ற ஓர் அமைப்பாக தமிழ் மக்கள்பேரவை உருவாகிற்று.

இவ் அமைப்பு கூட்டமைப்பினருக்கு எதிராகவே ஆரம்பிக்கப்பட்டது என்பதற்கு, பல கட்சி உறுப்பினர்களையும் தமது அங்குரார்ப்பணக் கூட்டத்திற்கு அழைத்த பேரவையினர், வேண்டுமென்றே தமிழரசுக்கட்சியின் முக்கியஸ்தர்களை அழைக்காமல்,அலட்சியப்படுத்தியதே சான்றாயிற்று.

இத்தனைபேருடைய ரகசிய ஒன்றிணைவும், திடீரென அவர்கள் நடத்திய கூட்டம் பற்றிய செய்தியும், சம்பந்தன், சுமந்திரன் குழுவினருக்குத் தெரியாமல் இருந்தது பெரிய ஆச்சரியமே!

அவர்களது கட்சியைச் சார்ந்த சிலரும் கூட இக்கூட்டத்தில் கலந்து கொண்டிருக்க, இந்த விடயங்கள் ஏதும் தெரியாமல் இருந்த இவர்களது குருட்டு நிலைமை, நிச்சயம் அரசியலுக்கு உகந்ததாய் இருக்கவில்லை.



இச்சம்பவம், இவர்களது சமூகத்தொடர்பின் பலவீனத்தை, அல்லது அதுபற்றிய இவர்களது அலட்சியத்தை தெளிவாய் வெளிப்படுத்தியது.

ஆயிரம் முரண்பாடுகள் இருந்தபோதும், தமிழினம் அதுவரை ஒன்றுபட்டு நின்றது என்பதற்கு, கூட்டமைப்பினரது தேர்தல் வெற்றிகளும், அவற்றை வைத்து கூட்டமைப்பினர் செய்து வந்த ஏகத்தலைமை என்ற பிரச்சாரமும், பேரவையின் தொடக்கத்தோடு பலவீனப்பட்டது உண்மையேயாம்.

நடந்து முடிந்த தேர்தலில், புனர் வாழ்வு பெற்ற போராளிகளால் ஆரம்பிக்கப்பட்ட, ஜனநாயகப் போராளிகள் கட்சியைக்கூட நிராகரித்த கூட்டமைப்பினரால், முற்றுமுழுதாய் பேரவையை நிராகரிக்க முடியாமற்போனது உண்மையே.

ஜனநாயகப் போராளிகள் கட்சியினர் இராணுவத்தின் வழிப்படுத்தலில் நடப்பவர்கள் எனும் வதந்தி யாராலோ, எவ்வகையிலோ பரப்பப்பட கூட்டமைப்பின் நிராகரிப்பு மக்களால் ஓரளவு அங்கீகரிக்கப்பட்டது.

இங்ஙனமாய், அதுவரை தமக்குச் சமமான ஓர் மாற்றணியின்றி இயங்கிய கூட்டமைப்பினருக்கு, பேரவை 'முண்டு' கொடுக்கத்தக்க 'சறுக்குக் கட்டை'யாயிற்று. அது மட்டுமன்றி தமிழினத்தின் பிளவும் அங்கே தான் தொடங்கிற்று.

தமிழரசுக்கட்சியின் மேல் தமது ஆத்திரத்தைக் காட்டமுடியாத பலரும், இக் கூட்டத்தில் இணைந்து கொண்டமை வெளிப்படை. அதுவரை தமக்கு நிகழ்ந்த அவமரியாதைகளை, வேறு போக்கிடம் இல்லாது சகித்துக் கொண்டிருந்தவர்கள், பேரவை என்கின்ற அணிதிரட்டலின் மூலம் தெம்பு பெற்று, தங்கள் பலத்தையும் காட்ட முற்படத் தொடங்கினர்.

முதலமைச்சர் மேல் நடவடிக்கை எடுக்க, சம்பந்தருக்குக் கிடைத்த இரண்டாவது சந்தர்ப்பம் இது. ஆனால், துணிந்து முடிவெடுக்காமல் அவர் மீண்டும் மீண்டும்,'வழுவழுப்பு' அறிக்கைகள் விட்டுக்கொண்டே தனது காலத்தைக் கழித்தார்.

பேரவையின் தொடக்கத்திற்குப் பின் முதலமைச்சரின் துணிவு அதிகமாயிற்று.அமைச்சர்கள் மீதான விசாரணைக்குழுவின் தீர்ப்பு வந்த பிறகு, கூட்டமைப்பின் தலைமையைப் புறக்கணித்து, தன் இஷ்டப்படி நடக்கத் தொடங்கினார் முதலமைச்சர். கூட்டமைப்புக்கு எதிரானவர்களை அமைச்சர்களாய் நியமித்தார்.

அவர் செய்த குளறுபடிகள் பற்பல. அப்போதும் சம்பந்தரின் துணிவின்மை நீடித்தது.

நேர்மையாக முதலமைச்சர்மேல் நடவடிக்கை எடுக்கத் துணிவில்லாத நிலையில், அவருக்கெதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றை, தமிழரசுக்கட்சியின் சார்பில் அவை முதல்வர், கவர்னரிடம் கையளிக்கும் நாடகம் ஒன்று அரங்கேறி, அம் முயற்சி படுதோல்வியில் முடிவுற்றது. அவர்கள் எதிர்பாராதபடி கஜேந்திரகுமார் அணியினர்,இளைஞர்களை ஒன்றுதிரட்டி முதலமைச்சருக்கு ஆதரவளிக்க, முதலமைச்சருக்கான செல்வாக்கு மேலும் பெருகிற்று.

அந் நம்பிக்கையில்லாப் பிரேரணை முயற்சி குளறுபடியாய்ப் போக,அப்போதும் சம்பந்தர் 'இது தனக்குத் தெரியாமல் நடந்த முயற்சி' என, ஓர் அநியாயப் பழியை தன் உறுப்பினர்கள் மேல் சுமத்தி, தன்னைக் காப்பாற்றிக் கொண்டார்.

அவரின் பின்வாங்கலில் அவைத் தலைவர் பலிக்கடாவானார்.தலைவரான தனக்குத் தெரியாமல் உறுப்பினர்கள்,நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவந்ததாய் சம்பந்தன் சொல்ல,அங்ஙனம் தலைவருக்குத் தெரியாமல் செயற்பட்ட உறுப்பினர்கள் மேல்,விசாரணையோ நடவடிக்கையோ ஏன் எடுக்கப்படவில்லை? எனும் கேள்வி விஸ்வரூபம் எடுத்தது. அதனால் தலைவரின் பொய்மை அல்லது இயலாமை, உலகிற்குத் தெளிவாய்த் தெரிந்து போயிற்று.

ரணிலின் மேடையில் இலங்கை யின் தேசியக் கொடியைக் காட்டி, பரவலாய் அதற்கு எதிர்ப்புக் கிளம்ப, பின் அது காளியின் சிங்கக் கொடி என்று சமாளித்தமை, புலிகள் கூட்டமைப்பைக் கூட்டவில்லை என்று அறிக்கை விட்டமை, முதலமைச்சர் கட்சிக்கு எதிராகச் செயற்பட, அவரின் மேல் நடவடிக்கை எடுக்கத் துணிவின்றி, மௌனமாய்ப் பார்த்துக் கொண்டிருந்தமை, ஆஸ்திரேலியாவில் வைத்து, 'முதலமைச்சருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்' என சுமந்திரன் சொல்லி, அதற்கும் எதிர்ப்புக் கிளம்ப,'அது அவரது சொந்தக்கருத்து' என்று சொல்லிவிட்டு, கட்சியின் அனுமதியின்றி அறிக்கை விட்ட அவர் மேல், நடவடிக்கை எடுக்காமல் பேசாமல் இருந்தது, புதுச்சட்டை கேட்ட தன் பிள்ளைக்கு, ஏழைத்தந்தை அடுத்த தீபாவளிக்கு வாங்கித் தருவேன் என, அடுத்தடுத்துப் பொய் சொல்லிச் சொல்லி ஏமாற்றுவதுபோல, இனப் பிரச்சினைக்கு அடுத்த வருடம் தீர்வு வரும் என, அடுத்தடுத்து பொய் அறிக்கைகளை விடுத்தமை என, பல விடயங்களால் சம்பந்தர் தனக்கான தலைமை மரியாதையை இழந்தமையோடு, கூட்டமைப்பின் மீதான மக்கள்



அபிப்பிராயத்தையும் சேர்த்து வீழச்செய்தார்.

இதுபோலவே, கட்சிக்கூட்டங்களில் சுமந்திரன் காட்டிய, அடாவடித்தனமான அதிகாரப் பாங்கும், கட்சியின் மற்ற உறுப்பினர்களின் அபிப்பிராயம் பெறாமல்,அவர் எடுத்த சில அரசியல் முடிவுகளும்,குறித்த ஒரு சமயம் சார்ந்து இயங்குகிறார் என, அவர் மேல் விழுந்த பழிச் சொற்களும், கூட்டமைப்பை ஓரளவு பாதிப்புக் குள்ளாக்கியமை நிஜமே.

நடந்து முடிந்த தேர்தலில் தேசியப் பட்டியலில், யாரை உள் அனுப்புவது என வினா எழுந்த போது, அதிக வாக்குகளைப் பெற்றிருந்தும் மர்மமாய் இடையில் நடந்த ஏதோ தவறுதலால், தோல்வியைத் தழுவிய அருந்தவபாலனை உள்ளனுப்ப வேண்டும் எனக் கோரிக்கை எழுந்தபோது, அப்பதவியை சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜாவுக்கு வழங்க சுமந்திரன் எடுத்த தனி முடிவு, பலரையும் வெறுப்புக்குள்ளாக்கியது. (15 ஆம் பக்கம் பார்க்க...)

## காந்திஜி பிறந்த 150ஆம் ஆண்டு நிறைவு

நல்லவராய் இரு – நன்மை செய் – தீமையை வெறுத்து,அமைதியை அறுவடை செய்–அனைவரையும் அன்பு செய் – ஒருவரையும் வெறுக்காதே – என்னும் உலகளாவிய நன்னெறிகளையே ஒவ்வொரு மதமும் விசுவாசிகளுக்குப் போதிக்கின்றது என காந்திஜி பிறந்த 150ஆம் ஆண்டு நிறைவில் திருப்பீட பல்சமய உரையாடல் அவைத் தலைவர் கூறினார்.

காலைக்கதிர் Kalaikathir
கிறிஸ்தவ செய்தி இதழ்
உண்மையை எடுத்துரைப்பதே என் பணி – யோவா:18:37
ஆசிரியர் : அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை – ஊடக விரிவுரையாளர்.
TCNL

## வன்முறையற்ற நிலை என்பது காந்திஜியின் மாபெரும் அன்பு

மகாத்மா காந்தி அவர்கள் பிறந்ததன் 150 ஆம் ஆண்டு நிறைவும் உலக வன்முறையற்ற நாளும் ஒக்டோபர் 2 சிறப்பிக்கப்பட்டது. அகிம்சை அல்லது வன்முறையற்ற நிலை என்பது காந்திஜி அவர்களுக்கு மாபெரும் அன்பு மற்றும் மாபெரும் பிறரன்புச் செயலாகும் என்றும், வன்முறையற்ற நிலை நோயுற்ற சமுதாயத்தைக் குணப்படுத்தும் மருந்தாகும் என்றும் ஆயர் கூறினார்.

## மறை அறிவிப்புக்கான விசேட மாதம் இது

### நாற்கோண பரிணாம வடிவத்தில் அதனை அனுகுவோம்

திருத்தந்தை பிரான்சீஸ் அவர்கள் 2017ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 22 ஆம் திகதி மறை அறிவிப்பு தினத்தன்று 2019ஆம் ஆண்டின் ஒக்ரோபர் மாதத்தை மறை அறிவிப்பிற்கான விசேட சிறப்பான மாதமாக அனுசரிக்க வேண்டுமென அழைப்பு விடுத்தார். இந்த அழைப்பு திருத்தந்தை 15ஆம் பெனடிக் அவர்களது அதிமுக்கிய தருணம் என்ற அப்போஸ்தலிக்க மடலின் நூற்றாண்டு நிறைவை நினைவு கூரும் நிகழ்வாக அமைய வேண்டும் என்பதே திருத்தந்தை பிரான்சீஸ் அவர்களின் விருப்பமாகும். இந்த ஒக்ரோபர் மாதத்தை ஒரு நாற்கோண பரிணாம வடிவில் வைத்து செயற்படுமாறு அழைப்பு விடுக்கிறார் திருத்தந்தை. இந்த நாற்கோண பரிணாம வடிவை பின்பற்றும் போது மறை அறிவிப்பு சிறப்பாகும். இந்த நாற்கோண பரிணாம வடிவு பின்வருமாறு அமையும்.–

**முதலாவது** – திரு அவையில் உயிர் வாழும் இயேசு கிறிஸ்துவை தனிப்பட்ட வாழ்வில் அனுபவித்தலாகும். இந்த அனுபவத்தை திருப்பலி, இறைவார்த்தை தனித்து செபம் செய்தல், குழுமமாக செபம்செய்தல், போன்ற செயற்பாடுகள் வழியாக இறை மனித உறவை ஆழப்படுத்தி பெற்றுக் கொள்ளலாம். இந்த வாழ்வே மறை அறிவிப்பாகலாம் இதன்வழி மறை அறிவிப்பை மேற்கொள்ள வரம் பெறலாம்.



**இரண்டாவது**-மறை அறிவிப்பு பணியாளர்களின் சாட்சிய வாழ்வாகும். நற்செய்தி அறிவிப்பை மேற்கொண்ட மறைபரப்பாளர்களின் புனித வாழ்வும் அவர்களின் மறை சாட்சிய மரணங்களும் இங்கு முன்னுரிமைப்படுத்தப்படுகின்றன. இவர்களின் சாட்சிய வாழ்வை படிக்கும் அனைவரும் சாட்சியம் தரும் வாழ்வை பெறலாம். இதன் வழி மறை அறிவிப்பு மேற்கொள்ள துணிவு பெறலாம்.

**மூன்றாவது** – மறை அறிவிப்புக்கான உருவாக்கமாகும். குருக்கள், துறவியர், மறை ஆசிரியர் பொது நிலையினர்களை விவிலிய , ஆன்மீக, இறையியல் போன்ற துறைகளின் வழியே மறைத்தூதுவர்களாக உருவாக்குதல் இங்கு முதன்மை பெறுகிறது. இந்த உருவாக்கம் மறை அறிவிப்புக்கான வழிகளை வகுக்கலாம். இந்த பயிற்சி வழி மறை அறிவிப்பு சிறப்பாக மேற்கொள்ளப்படலாம்.

**நான்காவது** – மறை அறிவிப்புக்கான பிறர் அன்புப் பணியாகும். உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் புலம் பெயர்ந்தவர்களாக சவால்களை எதிர் கொள்ளும் அந்நியர்களை சகோதர, சகோதரிகளாக வரவேற்க வேண்டும். ஏழைகள் மீதும், குறிப்பாக அந்நியர்களாக கருதப்படும் புலம் பெயர்ந்தோர் மீதும் பரிவு கொண்டு அவர்களது அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்வதில் ஈடுபடவேண்டும். இது மறை அறிவிப்புக்கான ஒரு வழியாகலாம். இது மறை அறிவிப்பை மேற்கொள்ள வழி வகுக்கும்.



**உலகத் தமிழ் கவிஞர் மாநாடு அமைப்பாளர்கள் கௌரவிப்பின் போது ...**

அங்கோர் தமிழ் சங்க துணைத்தலைவர் இராமேஸ்வரன் – செயலர் ஞானசேகரன் – அங்கோர் கம்போடிய அரச கலை கலாசாரத்துறை அமைச்சக இயக்குநர் மோன் சுயப் சொக்காய் – பந்நாட்டு தமிழர் நடுவத்தின் தலைவர் சித்த மருத்துவர் திரு தணிசாசலம் – அங்கோர் தமிழ் சங்கத் தலைவர் சீனவாச ராவ் ஆகிய உலகத் தமிழ் கவிஞர் மகாநாடு அமைப்பாளர்கள் கௌரவிக்கப்பட்ட போது எடுக்கப்பட்ட படம் இதுவாகும்.

# பத்திரிகைத் துறைக்கு ஆற்றிய பங்களிப்புக்காக ரூபன் மரியாம்பிள்ளை அடிகளாருக்கு விருது

## கம்போடிய அரசின் சார்பில் வழங்கப்பட்டது




ரூபன் மரியாம்பிள்ளை அடிகளார் தனது 12 ஊடகவியற் புத்தகங்கள் மற்றும் ஊடகவியற் பணி மூலம் பத்திரிகைத்துறைக்கு ஆற்றிய பங்களிப்பிற்காக கம்போடிய அரச விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். கம்போடியா நாட்டின் சியாம் ரீப் நகரில் செப்ரெம்பர் மாதம் 20ஆம் திகதி முதல் முதல் 25ஆம் திகதி வரை கம்போடிய அரச கலை கலாசாரத்துறையுடன் இணைந்து பன்நாட்டு தமிழர் நடுவம் மற்றும் அங்கோர் தமிழ் சங்கம் நடத்திய உலகத் தமிழ் கவிஞர் மகாநாடு நடைபெற்றது. இதில் மலேசியா, சிங்கப்பூர், இந்தியா, இலங்கை, டுபாய் ஆஸ்திரேலியா, நோர்வே போன்ற உலநாடுகளில் உள்ள தமிழ்க் கவிஞர்கள் எழுத்தாளர்கள் படைப்பாளிகள் என எறக்குறைய 200 பேர் இந்தியா, மலேசியா, இலங்கை, சிங்கப்பூர் மத்திய கிழக்கு நாடுகள் போன்றவற்றிலிருந்து வந்து கலந்து கொண்டு விருதுகளைப் பெற்றுக் கொண்டனர்.

உலகிலேயே மிகப் பெரிய வழிபாட்டுத்தலம் என்ற பெருமைக்குரிய அங்கோர்வாட் கோவிலுக்கு அருகில் உள்ள பிரமாண்டமான பயோண் ஈறா ஹோட்டலில் இந்த உலகத் தமிழ் கவிஞர் மகாநாடு நடைபெற்றது. கப்போடியாவில் இருக்கக்கூடிய 5 நட்சேத்திரதர விடுதி சுவையான இந்திய உணவு, கப்போடிய மணம் கமழும் வரவேற்பும் உபசரிப்பும் என மகாநாடு சிறப்பானது. 2 நாள்கள் உலகத் தமிழ் கவிஞர்மகாநாடு, 3 நாள்கள் கப்போடியசுற்றுலாப்பயணம் என 5 நாள்களுக்கு அமைக் கப்பட்டிருந்தது.

20 செப்ரெம்பர் 2019 அன்று அறிஞர்கள் வருகை, அறிமுகம், நிகழ்ச்சித் திட்டமிடல் பொறுப்பாளர்களின் தலைமை உரை வாழ்த்துரை சிறப்புரை என்பவற்றோடு முதல்நாள் நிகழ்வுகள் ஆரம்பமாயின.




உலகத் தமிழ் கவிஞர் மகாநாட்டின் இரண்டாம் நாள் நிகழ்வில் ரூபன் மரியாம்பிள்ளை அடிகளார் தமது 12 ஊடகவியற் புத்தகங்கள் மற்றும் ஊடகவியற் பணிகள் மூலம் பத்திரிகைத் துறைக்கு ஆற்றிய பங்களிப்பிற்காக கம்போடிய அரச விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

அங்கோர் தமிழ் சங்க தலைவர் சீனவாச ராவ், செயலர் ஞானசேகரன், துணைத்தலைவர் இராமேஸ்வரன், பன்நாட்டு தமிழர் நடுவத்தின் தலைவர் சித்த மருத்துவர், தணிசாசலம், சீனு ஞானம், பயண ஏற்பாட்டாளர் தாமரை சீனவாசராவ் ஆகியோரின் ஒழுங்கமைப்பில் நடைபெற்ற உலகத் தமிழ் கவிஞர் மகாநாட்டில் கம்போடிய அரச கலை கலாசாரத்துறை அமைச்சக இயக்குநர் மோன் சுயப் சொக்காய் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். இங்கு சிறப்பம்சம் என்னவென்றால் கம்போடிய அரச அரச கலை, கலாசாரத்துறை அமைச்சக இயக்குனர் மோன் சுயப் சொக்காய் தமிழ் மொழியைப் பேசமுடியாதவராக இருந்த போதிலும் இரண்டு நாள்களும் முழு நிகழ்வுகளிலும் கலந்து கொண்டார்.

கம்போடியா அரசின் மேலான ஆதரவுடன் அங்கோர் தமிழ்ச்சங்கம் ஒவ்வொரு ஆண்டும் இதுபோன்ற தமிழுக்கான பெருமுயற்சிகளை செய்துகொண்டே இருக்கிறது.

# கணினி உலகின் கடவுச்சொல்

## அம்பலமாகும் இதயவெளி இரகசியங்கள்

பாற்கடல்
மு.சிவநேசன்
sivanesan@usa.com






கணினி யுகம் நாளுக்கு நாள் வேகமாக மாற்றமடைந்து வருகிறது. இதனை முன்னேற்றம் என்பவர்கள் ஒருபுறம். பின்னடைவு என்பவர்கள் மறுபுறம். நினைப்பது அவரவர் தேவையையும் ஆற்றலையும் பொறுத்தே அமைகிறது.

கணினிகள் தொலைபேசிகளில் கடவுச்சொல்லை நம்பி எவ்வளவு தூரம் பயணிக்கலாம், வங்கிக் கணக்குகளை எவ்வாறு செயற்படுத்தலாம் என்ற கேள்விகள் சிலரின் மூளையில் எழுவதுண்டு.

சிலர் கடவுச் சொல்லை நூற்றுக்கு நூறு வீதம் நம்பி நிம்மதியாகப் பயணிக்கிறார்கள். சிலர் கடவுச் சொற்களை நெருக்கமானவர்களிடம் மறைப்பதில்லை. இவ்வாறு பலரிடம் கடவுச் சொல் நம்பிக்கை அடிப்படையில் உலா வரும்போது ஒரு தவறு நிகழ்ந்தால் அதன் சூத்திரதாரியை சரிவர இனங்காண முடியாமற்போய் விடுகிறது. சந்தேகம் பலர் மீது வீழ்கிறது.

இன்று முகநூலில் அனைவரும் கடவுச் சொல்லை நம்பியே பயணிக்கிறோம். ஒரு சுமூகமான குடும்பத்தில் பலரும் ஒரே முகநூல் கணக்கினை பயன்படுத்துகிறார்கள். அல்லது ஒவ்வொருவரின் கடவுச்சொல்லையும் மற்றவர்கள் தெரிந்து கொண்டுள்ளனர்.

இத்தகைய வஞ்சகமற்ற நிலைமையில் ஒரு கணக்கில் ஒரு தவறான பதிவு இடம் பெற்றால் அதற்கு யரர் பொறுப்பாளி? இது உள்வீட்டு யுத்தத்திற்கு வழிகோலுமா? விசாரணைகள் வீட்டிற்கு வெளியே காவல் துறை, நீதிமன்றம் என்றும் நீளுவது உண்டு.

இன்று வங்கிக் கணக்குகள், கடனட்டைகள், பற்று அட்டைகள் எல்லாமே கடவுச் சொல்லை நம்பிய பணப் பரிவர்த்தனை செயற்பாடுகளில் தங்கியுள்ளன. இத்தகைய சந்தர்ப்பங்களில் கடவுச் சொல்லை மிகவும் நுட்பமாக கையாள வேண்டிய தேவை எழுகிறது.

அசண்டையீனமாக கடவுச் சொல்லை கையாள்வது பண இழப்பிற்கே வழிவகுக்கும். ஒரு வங்கிக் கணக்கில் இருந்து பணம் பிறிதொரு கணக்கிற்கு கடவுச் சொல்லை பயன்படுத்தி மாற்றப்பட்டால் அல்லது இலத்திரனியல் அட்டை மூலம் இயந்திரத்தில் எடுக்கப்பட்டால் அது வங்கியின் தவறாகக் கருதப்பட முடியாது.

இதன் தற்பரியத்தை அனைவரும் சரிவரப் புரிந்துகொண்டு செயற்படுகிறார்களா என்பதே கேள்வி. அவதானமாக இருந்தாலே சில சந்தர்ப்பங்களில் கடவுச்சொல் கசிந்து விடுவதுண்டு.

இலத்திரனியல் அட்டையுடன் இரகசிய இலக் கத்தையும் குறித்து வைத்திருக்கும் வழமை பலரிடம் இருக்கிறது. இது மிகவும் ஆபத்தானது. நினைவில் வைத்திருக்க வேண்டிய சமாச்சாரம் அது.

இயந்திரத்தில் பணம் பெற அட்டையையும் இலக்கத்தையும் மற்றவர்களிடம் கொடுத்து அனுப்புகிறவர்கள் சிலர் நம்பி மோசம் போகிறார்கள். அவர்கள் குறிப்பிடும் தொகை பணத்தையும் பற்றுச்சீட்டையும் பெற்றுக் கொண்டபின், தமக்குத் தேவையான தொகையையும் எடுத்துக் கொள்பவர்கள் இருக்கிறார்கள். மறுமுறை வங்கிக்கு வரும்வரை அல்லது பணம் பெற அணுகும்வரை இது தெரியவராது.

வங்கிகள் முன்னெச்சரிக்கையாக அனுப்பும் பணப் பரிவர்த்தனை தொடர்பான குறுந்தகவல்களை உதாசீனம் செய்வதும் ஆபத்தானது.

தனிப்பட்டவர்கள் மாத்திரமல்ல, அனுபவம் மிக்க நிறுவனங்களும் கடவுச்சொல் கசிவினால் இழப்புக்களை சந்தித்து வருகின்றன. வங்கிகள் மற்றும் அலுவலகங்களில் பணியாளர்கள் மத்தியில் உள்ள கடவுச்சொல் கசிவுகள் மற்றும் ஊகங்கள் பல முறைகேடுகளுக்கு வழிவகுக்கின்றன.

நிறுவனங்கள் கடவுச் சொல்லினை செயற்படுத்த பல கடினமான நிபந்தனைகளை முன்வைப்பதும் சாதாரணமானவர்களுக்கு கடினமானதாகவும் நினைவில் வைத்திருக்க இயலாததாகவும் அமைகின்றது. உதாரணமாக கடவுச்



சொல்லில் upper case, lower case, symbols, மற்றும் இலக்கங்கள் என்பனவற்றை கலந்து பாவிக்க வேண்டி இருப்பது பலருக்கு சிக்கலாக இருக்கிறது.

பலர் தமது மின்னஞ்சல், முகநூல், கணினி கைபேசி, கோப்புக்கள், வங்கிச் செயற்பாடுகள் என அனைத்து நடவடிக்கைகளுக்கும் ஒரே கடவுச் சொல்லையே பயன்படுத்தும் வழமையைக் கொண்டுள்ளனர். இது மிகவும் ஆபத்தானது.

சிலரது கணினியையோ கைபேசியையோ திறந்து உள்ளே சென்றுவிட்டால் மின்னஞ்சல், முகநூல், இணைய செயற்பாடுகள் அனைத்தும் திறந்தே இருக்கக் காணலாம். பின்பு கடவுச் சொற்களின் தேவை இன்றியே அனைத்துச் செயற்பாடுகளையும் கண்காணிக்கவோ இயக்கவோ முடியும்.

கணினி கைபேசியில் கோளாறு என்று திருத்த நடவடிக்கைகளுக்காக ஒப்படைக்கும் சந்தர்ப்பங்களில் கடவுச் சொல்லையும் தெரிவிக்க வேண்டிய தேவை எழுவதுண்டு. இதன் போது அனைத்து இரகசியங்களையும் தாரை வார்த்துக் கொடுக்க வேண்டி ஏற்படலாம்.

மற்றவர்கள் சுலபமாக ஊகிக்கத்தக்க வகையில் பிறந்தநாள், துணையின் பெயர், செல்லப் பிராணி, வாகன இலக்கம் போன்றவற்றை பெரும்பாலானவர்கள் கடவுச் சொல்லாக பயன்படுத்துகின்றனர். தாம் சுலபமாக நினைவில் வைத்திருக்கவே அவர்கள் இப்படி செயற்படுவது ஆபத்தில் முடிந்தும் விடுகிறது.

இரண்டொருமுறை முயற்சித்தால் பலருடைய முகநூல் கணக்குகளிற்குள் ஊடுருவி விடும் வல்லமை படைத்தவர்களை அதிகம் கொண்டிருக்கும் உலகம் இது.

அப்பாவித்தனமாக பல பெண்கள் கைபேசிகளை வாங்கும் இடங்களிலேயே முகநூல், மின்னஞ்சல், வைபர் என்றெல்லாம் உருவாக்கிக் கொள்கிறார்கள். அவர்களின் அனைத்து நடவடிக்கைகளையும் தொடர்ந்து கண்காணித்து தொல்லையும் கொடுக்கும் விற்பனை முகவர்கள் உலகெங்கும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

கணனிகளை விட செயல்திறன் கூடிய கைபேசிகள் அறிமுகமாகிவரும் காலகட்டத்தில் தமது கைபேசியை இயக்க மற்றவர்களை நம்பியிருக்க வேண்டிய கட்டத்தில் பலர். அவற்றின் முழுமையான தற்பரியத்தையும் பயன் பாட்டையும் அறியாத போதும் தரமான கைபேசி மீதே மோகம் கொள்பவர்கள் இவர்கள்.

கைபேசியில் எடுக்கப்படும் படங்கள் கூகிள் தளத்தில் சேமிக்கப் படுகின்றபோது அக் கணக்குகளை வடிவமைத்தவரோ கைபேசியை ஒழுங்கமைத்து நிறுவித் தந்தவரோ தனது கணினியில் அவற்றை பதிவிறக்கம் செய்து கொள்ள இயலும். இவற்றை உணராத அப்பாவித்தனமான செயற்பாடுகள் சிக்கலைத் தோற்றுவிக்கலாம். சும்மா வேடிக்கையாக எடுத்துவிட்டு delete செய்வதற்குள் படம் வேறு தளங்களில் சேமிக்கப் பட்டுவிடும்.

பின் தங்கிய நாடுகளில் என்றில்லை, முன்னேற்றமடைந்த நாடுகளிலும் அத்தகைய செயற்பாடுகளில் தொய்வுநிலை அவதானிக்கப் பட்டே வந்திருக்கின்றது.

செப்ரெம்பர் 11, 2011 அன்று அமெரிக்காவில் நிகழ்த்தப்பட்ட விமானத் தாக்குதலில் வர்த்தக கேந்திர மையமான உலக வர்த்தக நிலைய இரட்டைக் கோபுரங்கள் சேதமடைந்து கொட்டுப்பட்ட வேளை அதிலிருந்த பல அலுவலகங்கள் செயலிழந்து போயின.

தனது குழந்தையை காப்பகத்திற்கு முதல் நாள் அழைத்துச் செல்ல குறுகிய விடுப்பில் சென்ற பிரபல பங்குச் சந்தை நிறுவன முகாமையாளர் ஒருவர் திரும்பிய வேளை எல்லாமே முடிந்துவிட்டது. இவரது அலுவலகமே கற்குவியல்களுக்குள் மாட்டிக் கொண்டது. அதில் பணியாற்றிய 960 பேரில் சிலரே பிழைத்துக் கொண்டனர். பலர் தமது கணனிகள், அலுவலக கோப்புக்கள் மற்றும் மனதில் உள்ள கடவுச் சொற்கள் சகிதம் புதையுண்டு போயினர். இப்படியான சந்தர்ப்பங்களில் தப்பிப் பிழைத்தவர்களின் பொறுப்பு சிக்கலான காரியம்தான்.

தாக்குதல் அதிர்ச்சியிலிருந்து மீள முதலே பொருளாதார மத்திய நிலையம் மீதான தாக்குதலின் விளைவுகளிலிருந்து மீள வேண்டிய அவசியம் அமெரிக்காவிற்கு. அப்படியானால் பிரபல பங்குச் சந்தை நிறுவன மொன்றின் தப்பிப் பிழைத்த முகாமையாளர் சகபணியாளர்களினதும் அலுவலக உடைமைகளினதும் இழப் புக்கு மத்தியில் நிறுவனத்தை இரண்டொரு நாள்களுக்குள் இயங்க வைத்தாக வேண்டும். புதிய அலுவலக இடங்களைத் தெரிவு செய்யலாம். கணினிகளை கொள்வனவு செய்யலாம். இணைப்புக்களை பெற்றுக் கொள்ளலாம். ***(இன்னும் வளரும்)***




# தென்னாபிரிக்கா அபார வெற்றி!

இரசிகர்களை உச்ச விறுவிறுப்பில் ஆழ்த்திவரும் ரக்பி உலகக்கிண்ண தொடர், தற்போது ஜப்பானில் நடைபெற்று வருகின்றது.

9ஆவது அத்தியாயமாக நடைபெற்று வரும் இத்தொடரில், தற்போது முதல் சுற்றுப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன.

இதில் நேற்று முன்தினம் ஒரு போட்டி நடைபெற்றது

ஷிசுயோகா விளையாட்டரங்கில் நடைபெற்ற இப்போட்டியில், இத்தாலி அணியும், முன்னாள் சம்பியன் அணியான தென்னாபிரிக்கா அணியும் பலப்பரீட்சை நடத்தின.

குழு பி பிரிவில் நடைபெற்ற போட்டியானது, ஆரம்பம் முதலே இரசிகர்களுக்கு உச்ச விறுவிறுப்பை பரிசளித்தது.

இதில் ஆதிக்கம் செலுத்திய தென்னாபிரிக்கா அணி, 49 - 03 என்ற புள்ளிகளின் அடிப்படையில், சிறப்பான வெற்றியை பதிவு செய்துள்ளது.

இந்த வெற்றியின் மூலம் தென்னாபிரிக்கா அணி, 10 புள்ளிகளுடன் குழு பி பிரிவில் முதலாவது இடத்தை பிடித்துள்ளது.

மறுபுறம் தோல்வியடைந்த இத்தாலி அணி, 10 புள்ளிகளுடன் புள்ளிபட்டியலில் இரண்டாவது இடத்தில் உள்ளது.

# ஆப்கானிஸ்தான் அணியின் இயக்குநராகவும் தலைமை தேர்வாளராகவும் என்டி மோல்ஸ்

ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணியின் இயக்குநராகவும், தலைமை தேர்வாளராகவும் என்டி மோல்ஸ், நியமிக்கப்பட்டுள்ளார். இதனை ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் சபை உறுதிசெய்துள்ளது.

என்டி மோல்ஸ், இதற்கு முன்னதாக 2014ஆம் ஆண்டு முதல் 2015ஆம் ஆண்டு வரை ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணியின் பயிற்சியாளராகவும் செயற்பட்டுள்ளார்.

அத்தோடு, 2019ஆம் ஆண்டு உலகக்கிண்ண தொடருக்கு பிறகு, ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணியின் இடைக்காலப் பயிற்சியாளராகவும் இருந்துள்ளார்.

உலகக்கிண்ண தொடரில் மோசமான விளையாட்டை பிரதிபலித்ததற்கு பிறகு, ஆப்கானிஸ்தான் அணியில் பல மாற்றங்கள் கொண்டு வரப்பட்டன.

இதற்கமைய அண்மையில், ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணியின் தலைமைப் பயிற்சியாளராக தென்னாபிரிக்காவின் லான்ஸ் குளூஸ்னர் நியமிக்கப்பட்டுள்ளார்.

அணியின் பயிற்சியாளராக இருந்த மேற்கிந்திய தீவுகளின் பில் சிம்மன்ஸின் பதவிக்காலம் முடிவடைந்த நிலையில், புதிய பயிற்சியாளராக லான்ஸ் குளூஸ்னர் நியமிக்கப்பட்டார்.

அத்தோடு, இங்கிலாந்தில் நடைபெற்று முடிந்த உலகக்கிண்ண கிரிக்கெட் தொடர் ஆரம்பமாவதற்கு முன்னர், ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணியில் அதிரடி மாற்றங்கள் கொண்டுவரப்பட்டன.

கடந்த நான்கு வருடங்களாக, ஆப்கானிஸ்தான் அணியில் மூன்று வகை கிரிக்கெட் போட்டிகளுக்கும் அணித்தலைவராக இருந்த 31வயது அஸ்கர் ஆப்கன் அணியின் தலைவர் பதவியிலிருந்து அதிரடியாக நீக்கப்பட்டார்.


இந்நிலையில் அவருக்குப் பதிலாக மூன்று வகை கிரிக்கெட் போட்டிகளுக்கும், புதிய அணித்தலைவர்கள் அறிவிக்கப்பட்டார்கள்.

ஒருநாள் அணிக்கு குல்பாதின் நைப் அணித்தலைவராகவும் ரஷித் கான் துணை தலைவராகவும் நியமிக்கப்பட்டனர்.

டெஸ்ட் அணிக்கு ரஹ்மட் ஷா அணித்தலைவராகவும், ஹஷ்மத் ஷாஹிடி துணை தலைவராவும் நியமிக்கப்பட்டனர்.

ரி-20 அணிக்கு ரஷித் கான் அணித்தலைவராகவும், ாபக் ஷின்வாரை துணை தலைவராகவும் நியமிக்கப்பட்டனர்.

எனினும், பின்னர் அணியில் ஏற்பட்ட குளறுபடி காரணமாக, அனைத்து வகையான கிரிக்கெட் போட்டிகளுக்கும் ஆப்கானிஸ்தான் அணியின் தலைவராக இளம் சுழல் நட்சத்திரமான ரஷீத்



கான் நியமிக்கப்பட்டார்.

இதுவரை 3 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ள ஆப்கானிஸ்தான் அணி, இரண்டில் வெற்றி, ஒன்றில் தோல்வியைத் தழுவியுள்ளது.

இதுவரை 123 ஒருநாள் போட்டிகளில் விளையாடியுள்ள ஆப்கானிஸ்தான் அணி, 59 ஒருநாள் போட்டிகளில், வெற்றியையும், 60 போட்டிகளில் தோல்வியையும் தழுவியுள்ளது.

இதுவரை 75 ரி-20 போட்டிகளில் விளையாடியுள்ள ஆப்கானிஸ்தான் அணி, 51 போட்டிகளில் வெற்றியும், 24 போட்டிகளில் தோல்வியையும் தழுவியுள்ளது.

# கிராண்ட் ஹோலோவே தங்கப் பதக்கம் வென்றார்

17ஆவது உலக தடகள சம்பியன்ஷிப் போட்டித் தொடர், தற்போது கட்டார் தலைநகர் டோஹாவில் விறுவிறுப்புக்கு பஞ்சமில்லாமல் நடைபெற்று வருகின்றது.

இரசிகர்களை இன்ப வெள்ளத்தில் ஆழ்த்தி வரும் இத்தொடரில் 7ஆவது நாள், நேற்று முன்தினம் நடைபெற்ற ஆண்களுக்கான 110 மீற்றர் தடை ஓட் டம் நடந்தது.

இதில் ஆண்களுக்கான 110 மீற்றர் தடை ஓட்டத்தின் இறுதி சுற்றில் நடப்பு ஒலிம்பிக் மற்றும் உலக சம்பியனான ஜமைக்காவைச் சேர்ந்த ஒமார் மெக்லியோட் உட்பட 9 வீரர்கள் பங்கேற்றனர்.

இதில் யாரும் எதிர்பாராத விதமாக அமெரிக்க வீரர் கிராண்ட் ஹோலோவே, பந்தயத் தூரத்தை 13.10 வினாடியில் கடந்து தங்கப்பதக்கத்தை முதல் முறையாக வென்றார்.

இதனைத் தொடர்ந்து, முன்னாள் உலக சம்பியனான ரஷ்ய வீரர் செர்ஜி ஷுபென்கோவ், பந்தயத் தூரத்தை 13.15 வினாடியில் கடந்து வெள்ளிப் பதக்கம் வென்றார்.

ஐரோப்பிய சம்பியனான பிரான்ஸ் வீரர் பாஸ்சல் மார்டினோட் லாகார்டி, பந்தயத் தூரத்தை 13.18




வினாடியில் கடந்து வெண்கலப்பதக்கம் வென்றார்.

இந்தப் போட்டியில் முதலிடத்தை பிடிப்பார் என்று எதிர்பார்க்கப்பட்ட ஒமார் மெக்லியோட் முதல் தடையை தாண்டிய போதே தசைப்பிடிப்பால் பாதிக்கப்பட்டார். இருப்பினும் அதனை சமாளித்து கொண்டு ஓடிய அவர் நிலை தடுமாறி தடைகளை எட்டி உதைத்ததுடன் ஓடுதளத்தில் கீழே விழுந்தார். இதனால் அவர் தகுதி நீக்கம் செய்யப்பட்டார்.

# பாதுகாப்பை மீறி மைதானத்திற்குள் நுழைந்த ரசிகர்!

விசாகப் பட்டினத்தில் நடை பெற்று வரும் இந்தியா - தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையேயான டெஸ்ட் போட்டியின் போது, ரசிகர் ஒருவர் மைதானத்திற்குள் ஓடி வந்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியது.

கிரிக்கெட் வீரர்களுடன் செல்பி எடுக்க மைதானத்திற்குள் நுழை வதற்கு ரசிகர்கள் பாதுகாப்பை மீறுவது இந்தியாவில் ஒரு பொது வான நிழ்வாகிவிட்டது. மொஹாலியில் நடந்த போட் டியின்போது இரண்டு ரசிகர்கள் மைதானத்திற்குள் நுழைந்தது பரபரப்பை ஏற்படுத்தியது.

இதனையடுத்து, இதுபோன்ற சம் பவங்களை தவிர்க்க வும், வீரர்களின் பாது காப்பை பலப்படுத்த வேண்டும் என போட்டியை நடத்தும் சங்கங்களுக்கு இந்தியக் கிரிக்கெட் சபை ஊழல் தடுப்பு பிரிவுத் தலைவர் அஜித் சிங் எச்சரிக்கை விடுத்தார்.

இந்நிலையில், விசாகப்பட்டினத் தில் இந்தியாவுக்கும் தென்னா பிரிக்காவுக்கும் இடையே நடந்து வரும் டெஸ்ட் போட்டியில் இது மீண்டும் நிகழ்ந்துள்ளது. இந்திய கிரிக்கெட் வீரர்களுடன் செல்பி எடுக்க ரசிகர் ஒருவர் மைதானத்திற்குள் நுழைந்தார்.



ரசிகர் பாதுகாப்பை மீறி மைதானத்திற்குள் நுழைந்த போது அவரைத் தடுக்க அங்கு எந்த அதிகாரியும் இல்லாததால், இந்திய வீரர் ரஹானே அந்த ரசிகரை திருப்பி அனுப்பியுள்ளார்.

# மறவன்புலோ...

(10 பக்கத் தொடர்ச்சி...)

கட்டுமான பணிக்காகப் புதியதாக அமைக்கப் படும் 25அடி அகலமும் 6 அடி நீளமும் உடைய தற்காலிகப் பாதையானது பிரதேச செயலரும் அரச அதிபரும் கேட்டுக் கொண்டமைக்கு இணங்க கட்டுமானப் பணி முடிவடைந்ததும் பிரதேச சபையிடம் நிரந்தரப் பாவனைக்காகக் கையளிக்கப்படும். மேலும் அமைக்கப்பட்ட வீதியில் வீதிக்குக் குறுக்கே வெள்ள நீர்வடிந்து ஓடுவதற்கான மதகுகள் அமைத்து கொடுப்பதற்கான திட்டத்தைத் தரும்படி பிரதேச சபையிடம் ஏற்கனவே விண்ணப்பம் கொடுக்கப்பட்டுள்ளது.

யுத்தகாலத்தில் இராணுவத்தினரால் கடற்கரை ஓரமாக அமைக்கப்பட்ட மண் அணையானது புதிய வீதி அமைப்பின் போது சமப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் இந்த மண் அணைகளை அகற்றி சமப்படுத்துவதற்கு மறவன்புலோ கிராம அபிவிருத்திச் சங்கம் தமது அனுமதியை 19.02.2017 அன்று எழுத்து மூலம் வழங்கியுள்ளது.

### இத்திட்டத்தினால் ஏற்படும் நன்மை

இலங்கையில் தற்போது மொத்த நாட்டுக்கும் நாளாந்த பாவனையாக 36 மில்லியன் மின் அலகுகளில் 1.1 மில்லியன் (3%) மட்டுமே காற்றாலை மூலம் உற்பத்தியாக்கப் படுகின்றது. இது அடுத்துவரும் 10 ஆண்டுகளில் 30% முதல் 40% ஐ அடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன் மூலம் அரசாங்கத்திற்கு ரூபா ஐயாயிரம் முதல் ஆறாயிரம் கோடி ரூபா அளவில் அரச செலவு குறைக்கப் படும். முழு நாட்டிற்கும் பெரும் நன்மையான மறவன்புலோ, தனங்கிளப்பு பகுதியில் அமைக்கப்படுகின்ற காற்றாலை செயல் திட்டமானது சிலரது அரசியல் நன்மைக்காக ஒரு வருடமாக தாமதித்ததன் காரணமாக ரூபா 55 கோடி பணம் அரசாங்கத்திற்கு நட்டம் ஏற்பட்டுள்ளது.

இப்பிரதேசத்தில் உள்ள சில நூறு மக்களின் வாக்குகளை பெறுவதற்காக குறுகிய அரசியல் நோக்கு கொண்டு சில அரசியல்வாதிகளின் தூண்டுதலின் காரணமாக அரசாங்கமானது இப்பெருந் தொகை பணத்தை இழந்துள்ளது.

அண்மையில் நடந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் தளத்தினுள் அத்துமீறி வந்து வன்முறையில் ஈடுபட்டு, உயிர் அச்சுறுத்தல் விடுத்தவர்களில் பலர் மது அருந்தியிருக்கக் காணப்பட்டமையானது பின்னணியில் தனிப்பட்ட நோக்கத்துடன் வேறு சிலர் இருக்கின்றமையை உறுதிப்படுத்துகிறது.

ஆகையால் சமூகநலனில் நாட்டம் உள்ள ஆர்வலர்கள் அனைவரும் தவறான வழியில் செல்லும் இவர்களை நல்வழிப்படுத்தல் நாட்டிற்கு நன்மை பயக்கும்.


# கணித செயன்முறை செயலி - Mathematics Mobile App










இச் செயலி உங்களது எந்தவொரு கணிதம் சார் வினாக்களுக்கும் செய்கை முறையுடன் பதில் அளிக் கும் என்று செயலி வடிவமைப்பாளரான மாணவன் பரமேஸ்வரன் பிரவீனன் அறிவித்துள் ளார். கணிப்பான் (Calculator) சாதனத்தின் தொழிற்பாட்டிற்கு மேலதிகமாகத் தரவுகளைப் பயன்படுத்திப் பெறும் விடையுடன் செய்கை வழித் தரவுகளையும் ஒரேநொடியில் காண்பிக்கும் வகை யில் இச்செயலி வடிவமைக்கப்பட்டுள்ளது.

அந்தச் செயலியை அனைவரும் தரவிறக்கும் செய்து பயனடையும் வகையில் அதனை அதிதிறன் அலைபேசியில் (Smart Phone) அன்ரொயிட் கூகுள் பிளே ஸ்ரோரில் மாணவன் பரமேஸ்வரன் பிரவீனன் வெளயிட்டுள்ளார்.

மாணவனின் முயற்சிக்கு ஆதரவாகவும் அவரைப் பாராட்டும் வகையிலும் உலகத்தமிழர்கள் அனை வரும் அதனைத் தரவிறக்கம் செய்து செயலிக்கான மதிப்பை வழங்கவேண்டும்.

யாழ்ப்பாணக்கல்லூரிமாணவர்களான பரமேஸ்வரன் பிரவீனன் மற்றும் அவரது சகோதரி பரமேஸ்வரன் தர்சிகா இருவரும் இணைந்து உருவாக்கிய கணித செயலி Google play store இல் Tutor Praveenan என டைப் செய்து தரவிறக் கம் செய்ய முடியும்.

## நீதித் தராசில்...

(11 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

பொதுமக்களின் முன்பாக அப்பதவிக் காலம் இரண்டாகப் பிரித்தளிக்கப்படும் என அருந்தவபாலனின் ஆதரவாளருக்கு அவர் கொடுத்த வாக்கும் பின் அலட்சி யம் செய்யப்பட்டது. அது போலவே சாவ கச்சேரியில் நடந்த ஒரு கூட்டத்தில், அருந்தவபாலனை அவர் அலட்சியப் படுத்திய விதம்,ஊடகங் களில் காட்சிப் பதிவுகளாக வெளி யாகிப் பலரையும் அதிருப்திக்குள்ளாக்கியது.

யாழ் மாநகரசபை மேயர் தெரிவில், தன் சமயம் சார்ந்த ஒருவரை நிறுத்த சுமந்திரன் காட்டிய பிடிவாதமும்,பலரை யும் முகம் சுழிக்க வைத்தது.

மேற்படி செயற்பாடுகளால் கூட்டமைப் பினுள் சுமந்திரனின் வானளாவி விரிந்த அதிகாரம், சமூகத்திற்குத் தெரியவந் தது.

கிட்டத்தட்ட கூட்டமைப்பினதும் தமிழ ரசுக் கட்சியினதும்,தலைவர் போலவே சுமந்திரன் நடந்துகொண்டார்.பெரும் பிழைகள் நிகழ்ந்த போதுமட்டும் அதைச் சமாளித்து அறிக்கை விடுவதோடு,சம் பந்தனின் தலைமை வேலை முடிந்து போயிற்று.

நடப்பது சம்பந்தனின் தலைமையா?

அல்லது சுமந்திரனின் தலைமையா? எனப் பலரும் ஐயுறத் தொடங்கினர்.

இவை ஒருபக்கப் பார்வைகள்.

மறுபக்கப் பார்வையும் உண்டு.

சம்பந்தனைப் பொறுத்தவரை,அவ ரின் அரசியல் அனுபவம், நாடாளுமன் றில் அவரது ஆளுமைமிக்க உரைகள், பேரினத்தாராலும் மதிக்கப்படும் தன்மை, வெளிநாட்டுத் தலைவர்களின் மரியா தையைப் பெறும் தகுதி, அவருக்கு ஒப் பான ஒரு தலைவர் கட்சிக்குள் இல் லாமை என்பவை பற்றியும் சுமந்திர னைப் பொறுத்த வரை, கட்சியில் அவ ருக்கு நிகரான தகுதிகொண்டோர் தம் இருப்பின்மை, இனப் பிரச்சினையை நிதானமாய் எதிர்கொள்ளும் அவரது ஆற்றல். உலகத்தலைவர்களின் அவருக்கான அங்கீகாரம் , இலங்கை மத்தியஅரசின் செயற்பாடுகளில் அவர் காட்டும் ஆளுமை, இலங்கை அரசியல் சார்பானதும் தமிழ்மக்கள் சார்பானது மான சட்ட நடவடிக்கைகளில் அவரது திறமை என்பவை பற்றியும் ஆராய்தல் அவசியமாகிறது.

அவற்றை அடுத்தவாரம் ஆராய் வோம்.

(நீதித்தராசு நிறுப்பதைத் தொடரும்)



# கோட்டாவுக்கே சு.கவின் ஆதரவு



## பிரசன்ன ரணதுங்க கூறுகிறார்

கொழும்பு, ஒக். 06

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அங்கத்தவர்கள் வெளிப்படுத்துகின்ற கருத்துக்கள் கோட்டாவை ஆதரிப்பதனை உறுதி செய்வதாக நாடாளுமன்ற உறுப்பினர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

கம்பஹாவில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்–

தற்போதைய சூழ்நிலையில் பார்க்கின்றப்போது 95 வீதமானவர்கள் கோட்டாவுக்கு ஆதரவளிப்பது உறுதியாகியுள்ளது.

ஐ.தே.கவின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாஸவுக்கு முன்வைத்துள்ள நிபந்தனைகள் தற்போது ஒவ்வொன்றாக வெளிவர ஆரம்பித்துள்ளன. மேலும் சமஸ்டிக்கு எதிரானவர்களே நாட்டில் அதிகம் உள்ளனர்.

இதேவேளை ஐக்கிய தேசியக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ, தற்போது இறுக்கமான சூழலில் அகப்பட்டுள்ளார் – என்றார். (ஐ)

# சர்வதேச நெருக்கடிகள் குழுவின் புதிய அறிக்கை முஸ்லிம்களின் பெறுமைக்கு கிடைத்த பெறுபேறு

## கிழக்கு முன்னாள் முதல்வர் நஸிர் அஹமட்



கொழும்பு, ஒக். 06

சர்வதேச நெருக்கடிகள் குழு வெளியிட்டுள்ள புதிய அறிக்கை முஸ்லிம் மக்கள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகளை துல்லியமாக எடுத்துக்காட்டியுள்ளது. ஈஸ்டர் தின குண்டுத் தாக்குதலுக்குப் பின்னர் முஸ்லிம் மக்களை இலக்குவைத்துதொடர்ந்துமேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை இது தோலுரித்துக் காட்டியுள்ளது. இந்த அறிக்கை எமது பெறுமைக்கும், ஐக்கியத்துக்கும் கிடைத்தமிகப் பெரிய பெறுபேறாகும் – இவ்வாறு தெரிவிக்கின்றார் கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் நஸிர் அஹமட்.

இது குறித்துஅவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்: –

நாட்டின் சமாதானத்துக்கும் பாதுகாப்புக்கும் அச்சுறுத்தலானமுறையிலே முஸ்லிம் மக்கள் மீது நெருக்குதல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதை இந்த அறிக்கைஉறுதிசெய்திருக்கிறது. சிங்கள தேசியவாதிகள் கட்டங்கட்டமாகதிட்டமிட்டுமேற் கொள்ளும் நடவடிக்கைகள் முஸ்லிம் மக்களைதுன்புறுத்துவதையும் அவமானப்படுத்துவதையும் இலக்காக கொண்டு அமைந்துள்ளன எனவும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது யதார்த்தத்தை தெட்டத் தெளிவாக எடுத்தியம்பியிருக்கிறது.

அதன் பின்புலத்திலேயே தற்போது நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலுக்கான பரப்புரைகள் கூட தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்ற கோதாவில் மேற்கொள்ளப்படுகின்றன என்பது குறித்தும் அதில் சுட்டப்பட்டுள்ளது.

எனவே நாட்டின் சட்டத்தைமதித்துநடக்கும் முஸ்லிம் மக்களை அந்நியப்படுத்தும் நடவடிக்கைககளை உடன் நிறுத்தி அவர்கள் நிம்மதியாக வாழும் சூழலை உருவாக்க அரசியல் தலைமைகள் முன்வர வேண்டும். கடந்தகாலங்களில் பலவீனமானதும் பிளவுபட்டது மானதலைமைத்துவங்களின் பொறுப்பற்ற நடடிக்கைகள் இனங்களுக்கிடையில் பாரிய இடைவெளியை எற்படுத்தியிருந்தன. எனவே அத்தகை நிலை எதிர்காலங்களில் ஏற்படாத வண்ணம் சிந்தித்துச் செயலாற்ற வேண்டிய பொறுப்பும் முஸ்லிம் மக்களிடம் உள்ளது.

நமக்கான பாதுகாப்பு கட்டமைப்பையும் இருப்புக்கான நிலைப்படுத்தலையும் நாம் முதலில் தக்க வைத்துக் கொள்ள வேண்டும். இதற்கான மறுசீரமைப்பு என்ன வென்பது குறித்து சிந்தித்து செய்பட வேண்டிய தருணம் ஒன்றுநமக்கு தற்போது அமைந்துள்ளது. இதனை நாம் சரியாகப் பயன்படுத்த வேண்டும்.

'எடுப்பார் கை பிள்ளை' யாக நாம் திக்கெங்கும் திசை கெட்டு அலையக்கூடாது. ஒற்றுமையாக ஓரணியாக திடன் கொண்டு எமக்கான இலக்குகளை அடைய நாம் எத்தனிக்கவேண்டும் – என்றார். (ஐ)

# பலாலியில் இருந்து திருச்சி மதுரைக்கு விமான சேவை!

கொழும்பு, ஒக். 06

யாழ்ப்பாணம் விமான நிலையத்தில் இருந்து இந்தியாவின் மதுரை, திருச்சி ஆகியநகரங்களுக்குவிரைவில்நேரடிவிமானப்போக்குவரத்து தொடங்கும் என சிவில் விமான போக்குவரத்து அமைச்சை மேற்கோள்காட்டிஇந்தியஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

யாழ்ப்பாணம் பலாலி ராணுவ விமான நிலையம், அபிவிருத்தி செய்யப்பட்டுச்சர்வதேசவிமானநிலையமாக எதிர்வரும் 17ஆம் திகதி முறைப்படி அறிவிக்கப்படும் . இதற்கு இந்தியாவும் நிதி உதவி வழங்கி இருந்தது. விமான நிலைய விரிவாக்கப் பணிகள் முடிவடையும் தறுவாயில் உள்ளன.

இந்நிலையில், பலாலியிலிருந்து மதுரை, திருச்சி, திருவனந்தபுரம் ஆகிய விமான நிலையங்களுக்கு நேரடிவிமானங்கள் இயக்க இந்திய அரசு விருப்பம் தெரிவித்துள்ளதாக அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# சஜித்தை அறிவித்த பின்பே எனக்குத் தூக்கம் வந்தது!

## கூறுகிறார் அமைச்சர் கிரியெல்ல



கொழும்பு, ஒக். 06

ஐக்கிய தேசிய முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளராக சஜித் பிரேமதாஸவைநியமிப்பதுதொடர்பில் கட்சியின் தீர்மானத்தை எதிர்பார்த்திருந்த எனக்கு, அவரை ஏகமனதாக அறிவித்த பின்னர் தான் சரியாகத் தூக்கம் வந்தது என அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் கண்டி மாவட்டத்துக்கான ஜனாதிபதி தேர்தல் பிரசார மத்திய நிலையத்தைத் திறந்து வைத்து உரையாற்றுகையில் இதனைக் கூறியுள்ளார்.

"ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாஸவை எந்தவித சர்ச்சையும் இன்றி வேட்பாளராக நியமித்துக் கொள்ள முடிந்தது. மிகவும் சமாதானமான ஒரு தீர்மானத்தை கட்சி எடுத்துள்ளது. ஜனாதிபதி வேட்பாளர் சஜித்தின் வெற்றிக்கு கட்சி அர்ப்பணிப்புடன் செயற்படும்'' எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# வவுனியாவில் மீண்டும் சோதனைச் சாவடிகள்!

வவுனியா, ஒக் . 06

வவுனியாவில் புதிதாக இராணுவச் சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டு சோதனை நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்படைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வவுனியா – ஈச்சங்குளம், பம்பைமடு, மதீனாநகர் போன்ற பகுதிகளில் வீதிகளை மறைத்து, இராணுவத்தினர் சோதனைச் சாவடி அமைத்துள்ளதுடன் குறித்த வீதியால் செல்லும் வாகனங்களையும் மறித்து தீவிர சோதனையில் நேற்றுக் காலை முதல் ஈடுபட்டு வருகின்றனர்.

இதேவேளை மதீனாநகர் பகுதியில் காணப்படுகின்ற வீடுகளிலும் இராணுவத்தினர் சோதனை நடவடிக்கைகளில் நேற்று முன் தினம் ஈடுபட்டனர். இராணுவத்தினரின் இந்த நடவடிக்கைகள் மக்களிடையே அச்ச மனநிலையை தோற்றுவித்துள்ளன.

வடக்கு – கிழக்கின் பல பகுதிகளில் மீண்டும் சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டு, இராணுவத்தினரினால் சோதனை நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

ஆனையிறவுபகுதியிலும்அண்மையில்சோதனைச் சாவடி அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ஐ)

# ரயில்வே தொழிற்சங்கத்தின் போராட்டம் தொடர்கின்றது

கொழும்பு, ஒக். 06

ரயில்வே தொழிற்சங்கத்தின் போராட்டம் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டுள்ளது. அதற்கமைய அவர்களின் போராட்டம் நேற்று 10ஆவது நாளாகவும் முன்னெடுக்கப்பட்டது.

அரசியல் தலைமீடுகளின் மூலம் பேச்சு ஒன்றுக்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டால், போராட்டத்தை முடிவுக்கு கொண்டுவருவதற்கு தாம் தயார் என்று இலங்கை ரயில்வே கட்டுப்பாட்டாளர்கள் சங்கத்தின் செயலாளர் மனுர பீரிஸ் தெரிவித்துள்ளார்.

போக்குவரத்துபிரதிஅமைச்சரின் நடவடிக்கை காரணமாகவே, அந்தப்போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வர முடியாதுள்ளது. அவரின் செயற்பாடுகள், தொழிற் சங்கங்களை கட்டுப்படுத் தும் வகையில் அமைவதாக மனுர பீரிஸ் குற்றம் சுமத்தியுள்ளார்.

எவ்வாறிருப்பினும் அரசியல் தலையீட்டின் அடிப்படையில் போராட்டத்தை முடிவுக்கு கொண்டுவர தாங்கள் இணங்குவதாகவும் அவர் கூறியுள்ளார்.

இதேநேரம், போராட்டத்தில் ஈடுபட்டுள்ள ரயில்வே பணியாளர்கள் உடனடியாக சேவைக்குத்திரும்பவேண்டும் என ரயில்வே திணைக்கள பொது முகாமையாளர் டிலந்த பெர்னாண்டோ தெரிவித்திருந்தார். (ஐ)

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 06.10.2019 இல் வெளியிடப்பெற்றது.